PROTONTECH

*Colour Photocopy Machines*

*Used in Abroad*
*New for Sri Lanka*

*175, Main Street*
*Trincomalee*

075 6602486






அறைவு 02 இயம் 38 May 17 - 23, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்


## பாடசாலை மாணாக்கருக்கு எச்ஐவி தொற்று

மாத்தறையில் இரண்டு பாடசாலை மாணாக்கருக்கு எச்.ஐ.வி தொற்றிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இத் தொற்று ஏற்பட்டது என்பது பற்றி ஆய்வுகள் நடைபெறுகின்றன.

அத்துடன் இலங்கையில் இவ்வருடம் முதல் மூன்று மாதங்களில் ஐம்பத்தொரு பேருக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது

# பாரபட்சமான மீன் விலை

## ஏலவிலை நிர்ணயிப்பில் ஏகபோகம்

### தமிழருக்கோ, முஸ்லிம்களுக்கோ பலகை இல்லை

திருகோணமலை பிரதான மீன்சந்தையில் மீன் கொள்வனவு விலைகளில் ஏகபோக உரிமை காணப்படுவதாக தெரிகின்றது.

மீன்பிடிப்பவர்கள் குறிப்பிட்ட சிலரிடம் மட்டுமே மீன்களை வழங்க வேண்டும் என்பதும் அவர்களால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைகளையே மீனவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எழுதாத சட்டப்படி அச்சந்தை இயங்குவதாக உள்ளூர் மீனவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

வறிய சிங்கள மீனவர் ஒருவர் தகவல் தருகையில் தாம் படகு வாங்குவதற்காகப் பட்ட கடனுக்காக குறித்த வியாபாரிக்கே தாம் பிடிக்கும் மீன்களைக் கொடுப்பதாகவும் அதற்காக கூறுவிலை எனச் சொல்லித் தருவது ஏற்கனவே அப் புதிய சந்தையில் பலகை(இடம்) வழங்கப்பட்ட பெரிய வியாபாரிகளால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விலையாகவே உள்ளது

13

## பட்டினிச் சாவினை எதிர்கொள்ளும் மேன்கமக் குடும்பம்

மூதூர்: கிளிவெட்டி, மேன்கமம் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்று பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளது.



பிச்சை எடுத்து தனது மகள்கள் இருவரையும் காப்பாற்றி வந்த ஊனமுற்ற முதியவர் திரு. சித்திரவேல் சுகவீனமடைந்து படுக்கையில் வீழ்ந்ததை அடுத்து கவனிப் பாரற்றுள்ள இக் கும்பம் தற்போது உண்ண உணவின்றிப் பலமாதங்களாக அல்லல் உறுவதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

விடயம் வெளித்தெரிந்ததை

13

## "திருமலை அபிவிருத்தித் திட்டங்களையும் மதிப்பிருவோம்" - ஐ.தே.க



மத்தள விமான நிலைய அபிவிருத்தித் திட்டம் உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணனியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் பெறுபேறுகளைப் பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி தற்போது கிழக்கில் சம்பூர் அனல் மின்நிலையப் பணிகள் மற்றும் திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவிருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சா டி சில்வா தெரிவித்துள்ளார்.

"மக்களின் பணத்தை வகைதொகையின்றிச்......

## சம்பூர் மகாவித்தியாலயத்தை மக்களிடம் தாருங்கள்

### "இலங்கை ஆசிரியர் சங்கம்"

13






## சுங்கான்குழிச் சுடலையில் தமிழரின் உடலங்களைப் புதைக்கத் தடை?

### முஸ்லிம் ஒருவர் தனது காணியென உரிமை

கிண்ணியாவிலுள்ள சுங்கான் குழிக் கிராமத்தின் சுடலையான கோயில்தீவு தமிழ்ச் சுடலைக்கு முஸ்லிம் ஒருவர் உரிமைகோரியிருப்பதை அடுத்து அங்கு மரணமடையும் தமிழர்களின் உடலங்களைப் புதைப்பதில் பெரும் சிக்கல் நிலைகள் எழுந்துள்ளன.

1960ம் ஆண்டில் இருந்து புராதன தமிழர்களின் சுடலையான இச் சுடலையினைத் தனது காணியென முஸ்லிம் ஒருவர் உரிமைகோரியிருப்பதுடன் அதற்கான எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் இடுகாடாக அந்நிலத்தைப் பாவிப்பதைத் தடைசெய்துள்ளார் என சுங்கான்குழி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

2013ம் ஆண்டில் காணி உறுதிப்பத்திரத்திற்கு அம் முஸ்லிம் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்த தலைவர் தம்மிடம் 1970ம் ஆண்டில் இருந்து 1986ம் ஆண்டு வரை உடலங்களைப் புதைத்த மரணச் சான்றிதழ்கள் கைவசம் இருப்பதாகத் தெரிவித்த தலைவர் இவ்விடயத்தைப் பிரதேச சபைத் தலைவருக்குத்.....

13



1974ம் ஆண்டின் மரணச் சான்றிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# நினைவு கூர்தல்....

இலங்கையில் இந்த முப்பதாண்டு கால போர் வரலாற்றில் மூன்று மாதங்கள் முக்கிய இடத்தினைப் பிடித்துக்கொண்டுள்ளன.

அவைமுறையே ஜுலை, நொவம்பர் மற்றும் மே மாதங்களாகும். பாரிய எடுப்பில் கட்டமைக்கப்பட்ட அரச ஆதரவுடன் நடைபெற்ற இனப்படுகொலை நடந்து, அதனை இனக் கலவரம் என வெளியுலகுக்குத் தெரிவித்து, அதன்படியே இன்றுவரை வரலாற்றில் பதிந்துள்ள ஜுலை மாதம் 1983ம் ஆண்டிலிருந்து முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

பின்னர் ஆயுதப் போர் ஆரம்பித்து அப் போரை விடுதலைப் புலிகள் மட்டுமே முன்னெடுக்கும் முறையில் திட்டமிட்டு, அதற்காக சகோதர இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்து அதன் பின்னர் அவர்களால் இறந்த விடுதலைப் புலிப் போராளிகளையும் தேசியத்திற்கு ஆதரவானவர்களையும் நினைவுகூறும் நாளாக, வாரமாக மாவீரர் வாரம் முனைப்புப்பெற ஆரம்பித்த நொவம்பர் மாதம் முக்கியம் பெறத் தொடங்கியது.

பின்னர் பயங்கரவாதிகளிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றும் போர் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட தமிழினப் படுகொலை நிகழ்ந்த மாதமான மே மாதம் 2009ல் இருந்து முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

இம் மூன்று முக்கிய மாதங்களிலும் நிகழ்ந்தவை தமிழர்களின் மரணங்களே. ஆனால் அதனை சுதந்திரமாக நினைவுகூர்வதற்கு எவ்வித வாய்ப்புக்களையும் தமிழ் மக்கள் கொண்டிருக்கவில்லை.

ஜுலைப் படுகொலைகளை நினைவுகூர்வதற்கு அரசோ அல்லது விடுதலைப்புலிகளோ எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. அரசு ஏன் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது வெளிப்படை. ஆனால் விடுதலைப் புலிகள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காது விட்டமைக்கான காரணம் அப்படுகொலைகளில் முதலில் கொலை செய்யப்பட்ட குட்டிமணி மற்றும் தங்கத்துரை போன்றோர் டெலோ அமைப்பின் முக்கியஸ்தர்களாக இருந்ததே.

நொவம்பர் மாத மாவீரர் நாளில் தமது உறவுகளை வெளிப்படையாக நினைவுகூர்வது பயங்கரவாதத் தடைச் சட்டப்படி அனுமதிக்கப்படாதிருப்பதால் அன்றும் தமது உறவுகளை நினைவுகூர்தல் சாத்தியமற்றுப் போயுள்ளது.

இன்றோ மே மாதப் படுகொலைகளை நினைவுகூற அரசு மறுத்துவருகின்றது. இவ்வாறு மறுப்பதற்கு அவர்கள் சொல்லும் முக்கியக் காரணம் விடுதலைப் புலிகளின் தலைவரையும், விடுதலைப் புலிகளையும் நினைவுகூற தமிழ் மக்கள் முயற்சிப்பார்கள் என்பதே.

அவ்வாறாயின் மே மாதத்தில் கொல்லப்பட்ட மக்களை யார் நினைவுகூர்வது?

இவ்வாறு நினைவுகூர்வதைத் தடுப்பது மனித உரிமை மீறல் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ண தனது குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர மறுப்பதன் ஊடாக அரசு மற்றொரு விடயத்தையும் சாதிக்க முயற்சிக்கின்றது போலத் தெரிகின்றது. கொல்லப்பட்ட அனைவரையும் விடுதலைப் புலிகள் என நீண்டகாலத்தில் வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியும் என்பதே அது.

எல்லாவற்றுக்கும் அப்பால் மரணித்தவர்களை நினைவுகூர்வது மனித உரிமை... அதனை மறுப்பதை உள்நாட்டில் பயமுறுத்தலின் ஊடாக அரசு சாதித்துக் கொள்ளலாம். ஆனால் சர்வதேசம் இதனையும் ஒரு குறிப்பாக தனது விசாரணைகளின் போது கருத்திற்கொள்ளும் போல் தெரிகின்றது.....

# தமிழில் இராணுவப் பயிற்சி



கிழக்கில் தெரிவாகும் தமிழ் இளைஞர்களுக்கான இராணுவப் பயிற்சியை கிழக்கிலேயே வழங்கவிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பரிகேடியர் வணிகசூரிய தெரிவித்துள்ளார். அத்துடன் அப்பயிற்சிநெறியைத் தமிழிலேயே நடாத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

"முப்படையிலும் காவல்துறையிலும் சேரவிரும்பும் தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு மொழி ஒரு பிரச்சனையாக இருக்கப் போவதில்லை. அவர்களுக்கு கிழக்கில. பயிற்சி அளிக்கப்படுவதுடன் அப்பயிற்சி தமிழ் மொழியிலேயே வழங்கப்படும்" என்றார் பேச்சாளர்.

# தொடரும் சித்திரவதைகள் – சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

இலங்கை மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் இன்னும் சித்திரவதை காணப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சித்திரவதை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையில் 1984ம் ஆண்டு சாசனம் நிறைவேற்றப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்துள்ள போதும் சித்திரவதை நிறுத்தப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சித்திரவதையை தடுத்து நிறுத்துவோம்' என்ற தொனிப்பொருளில் மனித உரிமை கண்காணிப்பகம் உலகம் முழுதும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

ஆனால் உலக நாடுகள் அதனை செயற்படுத்த முன்வருவதில்லை என மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

சித்திரவதை குறித்து உலக நாடுகள் இரட்டை முகம் காண்பிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் சல்லி ெ'ட்டி குற்றம் சுமத்தியுள்ளார்.

சட்ட ரீதியில் சித்திரவதையை நிறுத்துவதோடு அதனை செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

# புலிகளின் பாரிய கைத்துப்பாக்கி ரவைத் தொகுதி கைப்பற்றப்பட்டது.

கடந்த முப்பதாண்டுகால வரலாற்றில் கைத்துக்காக்கிக்கான இரவைகள் அதிகூடிய அளவு கண்டு பிடிக்கப்பட்ட நிகழ்வாக கடந்த 10ம் திகதி முள்ளிவாய்க்கால் கடற்கரைப் பகுதியில் நிகழ்ந்த கண்டு பிடிப்பு அமைந்துள்ளது.



கிழக்கு கடற்படைத்தளத்திற்குக் கிடைத்த துப்பொன்றை அடுத்து முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ள 681 பிரிகேட் இராணுவப் படையணியின் உதவியுடன் தோண்டப்பட்ட குழியிலிருந்து இவ்வாயுத ரவைத் தொகுதி கைப்பற்றப் பட்டுள்ளது.




அடுத்து வரும் பத்தாண்டுகளுக்குப் பழுதடையாமல் இருக்கும் வண்ணமாக இத் தொகுதி உராய்வு நீக்கியிட்டுப் புதைக்கப் பட்டிருந்ததாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கைத்துப்பாக்கிக்கான கொப் ரக ரவைகள் 120,000 , மக்னம் ரக ரவைகள் 5600, 12 குழல் ரக ரவைகள் 2,750 ஆகியனவே கைப்பற்றப் பட்டுள்ளன. (படங்கள்.கடற்படை இணையம்)

# திருமதி. பாலேஸ்வரிக்குச் சிலை

ஈழத்து இலக்கிய வரலாற்றின் வளர்சிசக்குத் தொண்டாற்றிய திருகோணமலையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திருமதி.ந.பாலேஸ்வரி அவர்களுக்கு திருகோணமலையில் சிலையொன்றை நிறுவுவதற்கான பிரேரணையொன்றை தான் முன்மொழியவிருப்பதாக திருகோணமலை நகரசபை உறுப்பினர் திரு.நந்தகுமார் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.




# வாழ்வோசை பாடசாலையின் ஆண்டு விழா

மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிப சங்கத்தினால் நடாத்தப்படும் செவிப்புலனற்ற சிறுவர்களுக்கான வாழ்வோசைப் பாடசாலையின் 15வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தூய காணிக்கை அன்னை தேவாலயத்தில் நன்றி நவிலல் வழிபாடு புதன்கிழமை(14) நடைபெற்றது.

மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிப சங்க அமைப்பின் பொதுச் செயலாளர் கலாநிதி டி.டி.டேவிட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

செவிப்புலனற்ற சிறுவர்களுக்கான வாழ்வோசைப் பாடசாலையின் அதிபர் திருமதி.சி.எஸ்.டேவிட், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் இயக்குனர் சபையின் அங்கத்தவர்கள் மற்றும் மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# முடிதிருத்திய படையினர்

பொத்துவில் பிரதேசத்தில் காஞ்சன்குடா பாடசாலைக்குச் சென்ற இராணுவ முடிதிருத்தும் அணியொன்று அங்குள்ள மாணவர்களுக்கு முடிதிருத்தும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குழந்தைகளின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கையான இம்முடி திருத்துப் பணியின் போது இருபது மாணவர்களின் முடி திருத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# கிண்ணியாவில் புதிய மாதர் சங்க பயிற்சி நிலையம்

பெண்களின் பலமே தேசத்தின் பலன் என்ற தொனிப்பொருளின் கீழ் கிண்ணியா புதிய மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலைய திறப்பு விழாவும் 2014 ஆம் ஆண்டுக்கான கண் காட்சியும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்தினால் புதன் கிழமை (14) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் சி.கிரிஸ்நேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தையல் மற்றும் வாழ்க்கைத் திறன் பயிற்சிகளை நிறைவு செய்த யுவதிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு தற்செயல் நிவாரணம், அங்கவீனர்களுக்கான வீல்செயார் உதவி, விசேட தேவையுடையவர்களுக்கான உபகரணங்கள் என்பன தலா இவ்விரண்டு பேருக்கு வழங்கி வைக்கப்பட்டன. (தமிழ் மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் அகதிகளாக வந்திறங்கிய பத்துத் தமிழர்கள் பற்றிய குறிப்பு

மே மாதம் 05ம் திகதி இரண்டு பெண்கள், மூன்று ஆண்கள் மற்றும் குழந்தைகள் ஐந்து தனுஸ்கோடி கரைக்கப்பால் அருச்சமுனைப் பிரதேசத்தில் தரையிறங்கினர். இவர்களைக் கைது செய்த காவல்துறை தமிழ்நாட்டின் புழல் சிறையில் தடுப்பிலிட்டுள்ளது.

தமதுயிரைப் பாதுகாப்பதற்காக தப்பியோடிவந்த அகதிகளை மண்டபம் முகாமில் வைத்தே சோதனையிடுவது தமிழ் நாட்டின் கொள்கையாக இன்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கத்திலுள்ள போதும் இவர்கள் மட்டும் ஏன் குடிவரவுச் சட்டத்தை மீறினார்கள் என புழல் சிறையிலிடப்பட்டுள்ளனர் என்ற கேள்வியை இந்திய ஊடகங்கள் எழும்பியுள்ளன.

இத் தரையிறக்கத்தை அடுத்து போர் நிறைவுற்று ஐந்து வருடங்களாகிய பின் தமிழ்நாடு நோக்கி இன்னும் பலர் அகதிகளாக வருகை தர உள்ளனரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அகதிகளாக வந்துள்ள மூன்று ஆண்களும் முன்னால் போராளிகளான எஸ்.தவேந்திரன், கே.தயாபராஜ் மற்றும் ஜீ.சுதாகரன் ஆவர். இந்தியாவில் தற்போதும் தடைசெய்யப்பட்ட அமைப்பாக விடுதலைப்புலிகள் உள்ள நிலையில் இவர்களைக் கையாள்வதில் கடும் முன்னெச்சரிக்கையுடனேயே இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகள் செயற்படவுள்ளன.

அத்துடன் அவர்கள் வருகை தந்துள்ள நேரத்தில்தான் குண்டு வெடிப்பு அச்சுறுத்தலை தமிழ்நாடு எதிர்கொண்டுள்ளதாக இந்திய புலனாய்வுத் துறை மாநில அரசை எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் ஏனைய இந்தியக் குடிமக்களைப் போன்ற உரிமைகளைப் பெற்றாலும், இந்தியாவை விட்டுச் சுதந்திரமாக வெளியேற உரிமை கொண்டவரல்லர். அத்துடன் பெரும்பாலான இலங்கை அகதிகள் கட்டாயம் இரவில் முகாமிற்கு திரும்பி வரவேண்டியவர்கள். இத் தடைகளால் அவர்கள் தமது நாட்டிற்குத் திரும்பலாம் என்றால் ஏற்கனவே நாட்டிற்குத் திரும்பிய சுமார் 11,000 அகதிகளை மீளக் குடியமர்த்தவோ அவர்களுக்கான வாழ்வாதார வசதிகளை மேற்கொள்ளவோ இலங்கை அரசு ஒன்றும் கடுமையாக முயலவில்லை.

சுமார் 90,000 விதவைகள் தமது குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் வடக்கிலும், கிழக்கிலும் உள்ளனர். அவர்கள் வெளிப்படையான பிரச்சனைகளை எதிர்கொள்ளும் அதேவேளை சுய பாதுகாப்பின்மை மற்றும் பாலியல் தொந்தரவுகளை உட்கிடையாக அனுபவிக்கின்றனர்.

இராணுவ மேலாதிக்கமானது வடக்கில் மிக அதிகமாக உள்ளது. சாதாரண மக்களின் வாழ்வியலில் இராணுவம் புலனாய்வாளர்களாக இலகுவாக உள்நுழைந்துவிடப் பயங்கரவாத தடுப்புச் சட்டம் துணை



புரிகின்றது. இராணுவ நிரந்தர குடியிருப்புக்களை அமைப்பதும், வளம் மிக்க நிலங்களை இராணுவம் கையகப்படுத்தியிருப்பதும் வடகிழக்கின் நிலமைகள் அவ்வளவு விரைவாக எவ்வித மாற்றத்தையும் கண்டுவிடப் போவதில்லை என தெரிகின்றன..

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கூட அதிகாரம் அற்றிருக்கும் வடமாகாண சபையால் தமது துன்பங்கள் சிற்றளவேனும் தீரும் என தமிழ்மக்கள் கட்டிய மனக் கோட்டைகள் தவிடுபொடியாகியுள்ளன.

கடந்த ஒரு வருடமாக புலம் பெயர்த் தமிழ் அமைப்புகள் தனிநாடு தொடர்பாக கடும் பிரயத்தனங்களை வெளிநாடுகளில் முன்னெடுத்திருந்தன. அதற்குத் தமிழ்நாட்டிலும் ஆதரவு பெருகி வருவதை அடுத்து ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் விவாதிக்கப் பட்டுக்கொண்டிருக்கும் போது இலங்கையில் சந்தேகத்திற்கிடமான வகையில் மூன்று முன்னாள் போராளிகள் வேட்டையாடப்பட்டனர். விடுதலைப்புலிகளின் மீளிணைவை இலங்கையில் மேற்கொண்டவர்கள் என அவர்கள் வேட்டையாடப்பட்டதுடன் அதனுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டார்கள்.

உள்நாட்டில் இந் நடவடிக்கை நடந்தேறியவுடன், வெளிநாட்டிலிருந்து விடுதலைப்புலிகளின் மீளிணைவை ஊக்கப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் 17 புலம் பெயர் அமைப்புக்களும், 472 தனிநபர்களும் இலங்கை அரசால் கரும்புள்ளி குத்தப்பட்டார்கள்.

இவ்வமைப்புக்களுடனும், தனிநபர்களுடனும் தொடர்பைப் பேணுவது குற்றம் என அறிவிக்கப்பட்டதை அடுத்து இவ்வமைப்புக்கள் மற்றும் தனிநபர்களுடன் தீர்வொன்றுக்காக தொடர்புகளைப் பேணிய அரசியல் தமிழ் தலைமைகள் தமது தொடர்புகளை இடைநிறுத்தும் நிலைக்கு உள்ளாகியுள்ளன.

தடை மற்றும் சுற்றிவளைப்புக்கள், கைதுகளால் முன்னாள் போராளிகள் அல்லது ஆதரவாளர்கள் மட்டுமல்ல தமிழ்மக்கள் அனைவருமே தாம் இலகுவாகக் கைது செய்யப்பட்டு விடுவோம் என அச்சம் கொண்டுள்ளார்கள்.

இவ் அச்சம் நியாயமானதாக இருப்பதற்குக் காரணம் இலங்கையில் இராணுவமே பல்வேறு விடயங்களில் இறுதித் தீர்ப்பளிப்பவர்களாக மாறியுள்ளனர் என்பதாலேயே.

ஆகவே இந்தியாவை வந்தடைந்துள்ள இம் மூன்று தமிழர்களின் கையாள்கையானது மேற்கூறிய பரந்துபட்ட சிக்கலான பண்புகளுடன் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஆனாலும் முன்னாள் போராளிகள் இந்தியாவில் புகலிடம் தேடப் பெரும்பாலும் விரும்பப்போவதில்லை. ஏனெனில் அவர்கள் தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றின் அங்கத்தவராக இருப்பதால் இந்தியாவில் தனியான, விசேட கண்காணிப்பகங்களிலேயே அவர்கள் வைத்திருக்கப்படக் கூடும். ஆனால் அவர்களின் மனைவி பிள்ளைகள் காப்பகங்களில் அனுமதிக்கப்படலாம். இதனால் முன்னால் போராளிகள் தமது குடும்பத்தவருக்கு இந்தியாவைப் புகலிடமாகக் கருதலாம். போராளிகளே இந்தியாவைத் தங்கிச் செல்லும் நாடாகவே பயன்படுத்த முனைவர்.

ஆனாலும் முன்னாள் போராளிகளான இவர்கள் இலங்கை மீதான நடவடிக்கைகளுக்கு இந்திய தமிழ்நாட்டைத் தளமாக மீண்டும் பயன்படுத்த முனையலாம் என்பதும் உண்மையே.

இந்நிலையில் இந்தியாவிற்குப் புகலிடம் தேடிவந்துள்ள இம் மூவர் தொடர்பாக தமிழ் ஊடகங்கள் மேலும் கருத்தாளத்துடன் ஆய்வுகளை மேற்கொண்டு அடக்குமுறைக்கு உள்ளாகியுள்ள தமிழர்களுக்கு தீர்வு தரக்கூடிய வழி முறைகளை முன்மொழியும் பொறுப்புண்டு.

மேலும் இந்தியாவின் மத்திய மாநில அரசுகள் இலங்கை தமிழரின் இன்னலைத் தீர்க்க உடனடியாக தொடர்ச்சியான திட்டங்களை முன்மொழிய வேண்டும். அத்துடன் இலங்கையுடன் இணைந்து சிறுபான்மையினரின் அடையாளங்கள் சிதைந்து போகாமல் இருக்கும் வண்ணம் சாதக முடிவொன்றை நோக்கி நகர வேண்டும்.

மூலம் - கேணல் ஹரிஹரன்
தமிழில் - மாயன்

பின்குறிப்பு:
(படத்திலிருக்கும் தம்பதியர் அகதிகளாக இந்தியா வந்த கதிர்வேலு தயாபரராஜா மற்றும் அவரது மனைவி உதயகலா ஆகிய இருவரும். இவர்கள் பல்வேறு பண மோசடியில் ஈடுபட்டதாக இலங்கையிலுள்ள பல காவல் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களில் பிடிவிறாந்துகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவர்கள் இந்தியாவிலிருப்பதை அறிந்தவுடன் சாவகச்சேரி நீதிமன்றம் ஊடாக சர்வதேசக் காவல்துறை ஊடாக இவ்விருவரையும் கைது செய்து இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன)

# மாணவருக்கும் ஆயுதப்படைகளால் பௌத்த தலைமைத்துவப் பயிற்சி



இலங்கையில் அனைத்து இடைநிலைக் கல்வி நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு ஓராண்டு பௌத்த தலைமைத்துவ பயிற்சியை இலங்கை இராணுவம் அளிப்பதற்கான முன்னெடுப்புக்கு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கியுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் இரண்டு அதியுயர் பௌத்த பீடங்களில் ஒன்றான அஸ்கிரியப் பீடத்தினர் இது குறித்து வைத்த பிரேரணைகளை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளதாக அந்த பீடத்தின் பேச்சாளரான மெதகம தம்மானந்த தேரர் பிபிசியின் சிங்கள சேவையிடம் தெரிவித்துள்ளார்.

"மாறுதலுக்குத் தயாராங்குகள்"என்னும் தலைப்பில் முன்னெடுக்கப்படும் அந்தப் பயிற்சியின் மூலம் இளைய சமூகத்தினருக்கு மேம்பட்டக் கல்வியை அளித்து, அதன் மூலம் சமூகத்தின்பால் அவர்களுக்கு உள்ள அணுகுமுறையை மாற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு புதிய அரசியல் சாசனம் தேவை என்றும் அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர். தற்போதுள்ள அரசியல் சாசனத்தை வைத்துக் கொண்டு நாடு முன்னேற முடியாது என்றும், அதனால் அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யவேண்டும் அல்லது புதிய அரசியல் சட்டம் ஒன்று தேவை என்று தாங்கள் கோரிக்கை வைத்துள்ளதாகவும் மெதகம தம்மானந்த தேரர் கூறுகிறார்.

நாட்டின் வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் இந்த தலைமைத்துவப் பயிற்சித் திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும், அனைத்து சமூகத்து மாணவர்களும் தமது சொந்த மொழியில் இந்தப் பயிற்சியைப் பெறும்போது, அவர்கள் இந்தத் திட்டத்தின் நோக்கத்தை நன்கு புரிந்து கொள்வார்கள் எனவும் அவர் கூறுகிறார்.

இலங்கையில் சுதந்திரத்துக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அரசுகள் அனைத்து சமூகத்தினரும் ஒன்றாக அமைதியாக வாழும் வாய்ப்பை 100 சதவீதம் வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நன்றி - பி.பி.சி தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - அகலாத பிளவுகள் -

-கே.சஞ்சயன்-

2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இரவு முள்ளிவாய்க்காலின் குறுகிய நிலப்பகுதிக்குள் முடங்கிப் போயிருந்த விடுதலைப் புலிகளின் தலைமை மற்றும் தளபதிகள் தப்பிச்செல்லும் முயற்சிகள் தோல்வி கண்டதுடன், மூன்று தசாப்தகாலப் போருக்கு முடிவு கட்டப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அந்தப் போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்தப் போர் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் அந்த இயக்கத்தின் ஒட்டுமொத்த பலத்தையும் கூட அழித்து விட்டது.

போர் முடிவுக்கு வந்தவுடன், நாட்டில் மீண்டும் அமைதியை நிலைநாட்டி விட்டதாக அரசாங்கம் பிரகடனம் செய்திருந்தது. மூன்று தசாப்தங்களாக பல ஆட்சியாளர்களாலும் செய்ய முடியாமல் போன காரியத்தை தாம் செய்துவிட்டதாகவும் அரசாங்கம் பெருமிதத்துடன் கூறியது.

ஆனால், போரை முடிவுக்கு கொண்டு வந்தாலும், நிலையான அமைதியைக் கொண்டு வருவது அவ்வளவு சுலபமான காரியமில்லை என்பது காலப்போக்கில் தான் வெளியே தெரியவந்தது.

ஒரு போரின் முடிவு என்பது ஒரு அமைதியின் தொடக்கம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், போர் இல்லாத நிலையை முழுமையான அமைதி என்று கருதமுடியாது.

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது, அமைதி வந்து விடும் என்று பலரும் கருதினாலும், அதுவே அமைதியை உருவாக்குவதற்காக தொடக்கப் புள்ளியாக கருதப்பட்டாலும், அந்த நிரந்தர அமைதியை உருவாக்குவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என்றே பொதுவாக மதிப்பிடப்படுகிறது.

தமிழரின் ஆயுதமேந்திய போர் முடிவுக்கு வந்து விட்டாலும், அவர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர அரசாங்கத்தினால் முடியவில்லை.

ஏனென்றால், தமிழரின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளை நிறைவேற்றி, அதற்கான போராட்டத்தை முடித்து வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் வசமே உள்ளது. இனப் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்விலும் சுமூகமான வாழ்க்கையிலும் தான் நிலையான அமைதி தங்கியுள்ளது. ஆனால், போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகளாகியும் அரசாங்கத்தினால் நிலையான அமைதியை உருவாக்க முடியாமல் போய்விட்டது.

போர் முடிவுக்கு வந்த ஆரம்ப காலங்களில் இராணுவ வழிமுறையின் கீழ், ஆயுதப் போராட்டத்துக்கு தீர்வு கண்ட நாடு என்று சர்வதேச ஊடகங்கள் இலங்கையை பெருமைப்படுத்தியதுண்டு. ஆனால், இப்போது அதே ஊடகங்கள் இராணுவ வழிமுறை மூலம் ஆயுதப் போராட்டத்துக்கு முடிவு கட்டிய இலங்கை அரசினால் நிலையான அமைதியைக் கொண்டு வர முடியவில்லை என்று விமர்சிக்கின்ற போக்கை காண முடிகிறது.

போர் மூலம் இலங்கையில் அமைதி ஏற்படுத்தப்படவில்லை என இன்று உலகில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் நிலை உருவாகியுள்ளது. அது மட்டுமன்றி, இந்த ஐந்து ஆண்டுகளில் இனங்களுக்கு இடையிலான பிளவுகளில் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. இனப்பிணக்குகள் என்பது புதிய புதிய வடிவங்களில் இன்னும் ஆழப்படுத்தப்படுகின்றதே தவிர, நிரவப்படவில்லை.

போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் மூலம் பிளவுபட்டிருந்த நாட்டை ஒன்றுபடுத்தி விட்டதாகவும் வவுனியாவுக்கு அப்பால் பாஸ் எடுத்துக்கொண்டு செல்லும் யுகத்தை மாற்றி விட்டதாகவும் எல்லைக் கிராமங்கள் என்ற சொல்லையே வழக்கிழந்து போகச் செய்து விட்டதாகவும் அரசாங்கம் பெருமையாகக் கூறி வருகிறது.

போரின் முடிவு அரசாங்கத்துக்கு இத்தகைய பெருமைகளை அளித்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்று நெடுங்காலமாகவே கூறப்பட்டு வந்த இலங்கைத் தீவு இன்று ஒன்றுபடுத்தப்பட்டுள்ளது.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே இருந்து வந்த இந்த எல்லையை அரசாங்கம் போர் மூலம் அகற்றியுள்ளது. வடக்கிலுள்ள மக்கள் தெற்கிற்கும் தெற்கிலுள்ள மக்கள் வடக்கிற்கும் கட்டுப்பாடுகளின்றிப் பயணம் செய்ய முடிகிறது. ஆனால், தெற்கினதும் வ்டக்கினதும் மக்களின் மனோநிலைகளில் எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லை.

போரில் தோற்றுப்போன சமூகம் என்ற எண்ணம் வடக்கில் உள்ள தமிழ் மக்களிடம் உள்ளது. போரில் வெற்றி பெற்றவர்கள் என்ற மிதப்பான எண்ணம் தெற்கிலுள்ள மக்களிடம் உள்ளது. இந்த அடிப்படை எண்ணப்பாட்டிலிருந்து விடுபட்டு, இருதரப்பினராலுமே போரின் முடிவு பற்றிய ஒரு தெளிவை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை.

அதாவது, போர் முடிவுக்கு வந்த மே மாதம் 18ஆம் திகதியை போர் வெற்றி விழாவாக தெற்கிலுள்ள மக்கள் கொண்டாடிக் களிக்கிறார்கள்.
ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் அவ்வாறே கொண்டாட வேண்டும் என்று அரசாங்கம் நிர்ப்பந்திக்கிறது. ஆனால், வடக்கிலுள்ள மக்களாலோ அவ்வாறு கொண்டாட முடியவில்லை.

ஏனென்றால், போரின் இறுதி நாட்களில் கொல்லப்பட்ட தமது உறவுகளான மக்களை மறந்து விட்டு, அவர்களால் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டாட்டங்களில் ஈடுபட முடியவில்லை.

அது மட்டுமன்றி, இந்தப் போரில் கொல்லப்பட்ட உறவுகளைக் கூட நினைவுகூர முடியாதளவுக்கு தடைகளை அவர்கள் எதிர்கொள்கிறார்கள்.
பல்கலைக்கழகம் பூட்டப்பட்டு, பொது இடங்களில் யாரேனும் நினைவுகூரல்களை நடத்தினால் தண்டிக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டு, ஒருவித இயல்பற்ற சூழலுக்குள் வடக்கிலுள்ள மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்போதெல்லாம், வடக்கிலுள்ள மக்களுக்கு மே - 18, நவம்பர் - 27 போன்ற நினைவு நாட்கள் வரப் போகின்றன என்று முந்திக்கொண்டு நினைவூட்டுவதே அரசாங்கமும் படைத்தரப்பும் தான்.

இந்த நாட்களில் எந்த நினைவு நிகழ்வு நடத்தப்படக்கூடாது என்று அச்சுறுத்தி அடக்கத் தொடங்க, பழையவை எல்லாமே தமிழ் மக்களுக்கு இயல்பாகவே நினைவுக்கு வந்து விடுகிறது. இம்முறையும் கூட அதுவே தான் நடந்திருக்கிறது. நடந்துகொண்டிருக்கிறது.

இந்த நிலை இப்போதைக்கு மாறப் போவதுமில்லை. மாறப் போவதற்கான அறிகுறிகளையும் காண முடியவில்லை. என்னதான் எல்லைகளை ஒன்றிணைத்தாலும், வடக்கிலுள்ள மக்களாலும் தெற்கிலுள்ள மக்களாலும் மகிழ்ச்சியிலோ துக்கத்திலோ ஒன்றிணைய முடியவில்லை.

மனித வாழ்வில் துக்கமும் மகிழ்ச்சியும் தான் ஒன்றாக இணைந்து பகிர்ந்துகொள்ளவும் கொண்டாடவும் வேண்டிய முக்கியமான இரண்டு நிகழ்வுகள். ஆனால், இந்த அடிப்படை விடயத்தில் கூட தெற்கிலுள்ள மக்களும் வடக்கிலுள்ள மக்களும் ஒன்றிணைய முடியாத வெற்றியைத் தான், அரசாங்கத்தினால், நாட்டுக்குப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது.

இப்படியான நிலையில் இந்தப் போர் எந்தளவுக்கு அர்த்தபூர்வமான விளைவைத் தேடித்தந்துள்ளது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது. வரலாற்றில் எத்தனையோ போர்கள் நிகழ்ந்துள்ளன. போர்களில் ஏதேனும் ஒரு தரப்பு அழிவுகளையும் தோல்விகளையும் சந்திப்பது இயல்பே. அவ்வாறான அழிவுகள், இழப்புகளையெல்லாம் கடந்து அவற்றையெல்லாம் மறந்து இன்று பல நாடுகள், இனங்கள் நட்புறவு கொண்டுள்ளதைக் காணமுடிகிறது.

ஆனால், இலங்கையில் அத்தகையதொரு நிலை தோன்றுவதற்கான அடிப்படைகளைக் காணமுடியவில்லை.

இந்தப் போருக்கான அடிப்படையே இனப்பிரச்சினை தான். அந்த இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட்டிருந்தால், போர் ஒன்று இலங்கையில் ஏற்பட்டிருக்காது. அதுபோலவே போருக்குப் பின்னரேனும் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட்டிருந்தால் கூட, இந்த விரிசல் ஆழப்படுத்தப்பட்டிருக்காது.

போர் முடிவுக்கு வந்தவுடன், பொறுப்புக்கூறுவதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் முக்கியமானது என்று முதலில் கூறிய நாடு அமெரிக்கா தான்.

இவையிரண்டும் தவறவிடப்பட்டால், அதுவே இன்னொரு போரை பத்தோ, இருபதோ ஆண்டுகளில் தோற்றுவிக்க காரணமாகி விடும் என்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்கா எச்சரித்திருந்தது. ஆனால், அதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்று உலகில் பொறுப்புக்கூறல் என்பது முக்கியமான வார்த்தையாக மாறியுள்ளது. அதாவது மனித உரிமைகள் என்ற சொல்லுக்கு இணையான மகத்துவம் இதற்கும் உருவாகத் தொடங்கியுள்ளது. இம்மாதம் முதலாம் திகதி நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் பொறுப்புக்கூறலை முன்னிறுத்துவது குறித்த சிறப்புக் கூட்டம் ஒன்றை ஐ.நா. நடத்தியிருந்தது.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட ஐ.நா.வின் பிரமுகர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

பொறுப்புக்கூறல் என்பது தனி மனித வாழ்விலிருந்து ஐ.நா. வரை அவசியமானது என்பது இங்கு வலியுறுத்தப்பட்டது. இலங்கையிலும் போரின்போது இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக்கூறப்படுவது முக்கியமானதாக இருந்தாலும், இந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கம் அதற்கு இடமளிக்கத் தவறிவிட்டது.

இதனால், சர்வதேச அளவில் தலையீடுகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதை மறுக்கமுடியாது. கடந்த மூன்று ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது மட்டுமன்றி, சர்வதேச விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படும் நிலைக்கும் இதுவே காரணமாயிற்று.

பொறுப்புக்கூறலில் மட்டுமன்றி, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் கூட அரசாங்கம் இந்த மூன்று ஆண்டுகளிலும் பெரிதாக எதையும் சாதிக்கத் தவறிவிட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து ஒரு அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ளபோதிலும், அந்த அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் இன்னமும் தயாராக இல்லை. நல்லிணக்கம் என்பது விட்டுக்கொடுப்பில் தான் உருவாக வேண்டும். ஆனால், இரண்டு தரப்புகளுக்கும் இடையில் உள்ள மிகப் பெரிய இடைவெளியை நிரப்ப முடியாமல் உள்ளது. காரணம், தமிழர் தரப்புக்கு அதிகாரமளிக்க சிங்கள மக்களும் அரசாங்கமும் தயாராக இல்லை.

அதேவேளை அரசாங்கத்தையோ, சிங்கள மக்களையோ நம்புவதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை. இந்த அவநம்பிக்கை தோற்றம் பெறக் காரணம் கடந்த காலங்களில் ஏமாற்றப்பட்டது தான். இனிமேலும் ஏமாந்துவிடக் கூடாது என்ற எண்ணம் இருதரப்பிடமும் உள்ளது.
இரண்டு தரப்புமே விட்டுக்கொடுக்கத் தயாராகிவிட்டால், தான் இடைவெளி குறையும். நல்லிணக்கத்துக்கான கதவுகள் திறக்கும்.

ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த இடைவெளியை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

இன்னமும் தமிழ் மக்கள் மீது நம்பிக்கை கொள்ளாத போக்கும் படைப் பலத்தை வைத்து அவர்களை அடக்கியாள நினைக்கும் போக்கும் தமிழ் மக்களால் அரச தரப்பு மீது நம்பிக்கை கொள்ளக்கூடிய நிலையை உருவாக்கவில்லை.

இத்தகைய இடைவெளிகளைக் குறைக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கே அதிகம் உள்ளது. அதாவது போரில் வெற்றி பெற்ற அரசாங்கமே, தானாக முன்வந்து வடக்கிலுள்ள மக்களின் அச்சத்தைப் போக்கி அவர்களை அரவணைத்திருக்க வேண்டும்.

அதனைச் செய்யத் தவறியதால் தான், மே மாதம் 18ஆம் திகதியை புலிகளின் தலைவர் பிரபாகரனின் நினைவு நாளாக வடக்கிலுள்ள மக்கள் கொண்டாடி விடுவார்களோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

அந்த நாளை அரசாங்கம் முப்பதாண்டு காலப் போரில் கொல்லப்பட்ட அனைவருக்குமான நினைவு நாளாகப் பிரகடனப்படுத்தியிருந்தால், வடக்கிலுள்ள மக்களும் தெற்கிலுள்ள மக்களுடன் இணைந்திருப்பார்கள்.

ஆனால், தமிழரின் ஆயுதப் போராட்டம் தோற்றுப்போன அந்த நாளை, வெற்றி விழாவாக கொண்டாடியதால் தான் அவர்களால் தெற்குடன் இணைய முடியவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பெறப்பட்ட வெற்றி என்றே அரசாங்கம் கூறினாலும், அதனை எத்தனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்?

ஏனென்றால், பயங்கரவாதத்துக்கு எதிரான போராக அது இருந்திருந்தால், மே மாதம் 18ஆம் திகதி அரசாங்கம் பெற்ற வெற்றி பயங்கரவாதத்துக்கு எதிராக பெறப்பட்ட வெற்றியாக இருந்திருந்தால், அந்த விழாவில் தமிழர்களும் ஒன்றிணைந்திருப்பார்கள்.

ஆனால், ஐந்து ஆண்டுகளாகியும் அரசாங்கத்தின் வெற்றி விழாக்களுக்கு தமிழர்கள் இழுத்துச் செல்லப்படும் நிலையில் இருப்பதும், அந்த நாளில் துக்கம் அனுட்டிக்கக் கூட முடியாதளவுக்கு தமிழர்கள் மீது தடைகள் போடப்படுவதும் போரின் வெற்றி ஒட்டுமொத்த இலங்கைக்குமானது அல்ல என்பதையே உறுதிப்படுத்துகிறது.

போரில் பெறும் வெற்றியை நிரந்தரப்படுத்துவது தான், முக்கியமானது. ஆனால், அரசாங்கமோ இன்னொரு போராட்டம் தோன்றாமல் தடுப்பதே நிரந்தர வெற்றி என்று கருதுகிறது. ஆனால், நிரந்தர வெற்றி என்பது நிலையான அமைதியை உருவாக்குவதில் தான் தங்கியுள்ளது.

அந்த நிலையான அமைதி உருவாக்கப்படாத வரையில் இலங்கைத் தீவு எரிமலையின் மீது தான் குந்தியிருக்க

நன்றி-தமிழ்மிரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடக்கி விழாத குழந்தையோ தப்பு செய்யா மனிதனோ ஏது!!

...நாட்டு நடப்பு...

அந்த அனாதைகள் விடுதியில் அவன் எப்படி? யாரால்? சேர்க்கப்பட்டான் என்ற முழு விபரமும் அந்த பதினைந்து வயது நிரம்பிய அவனுக்கு இன்னும் அறவே தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் அவனுக்கு தெளிவாகத் தெரியும் தான் பெற்றோர், உற்றார், உறவினர் இல்லாத ஓர் அனாதை என்று.

எந்தவொரு பறவை குஞ்சும் எத்தனை காலத்திற்குத் தான் கூட்டுக்குள் இருப்பது? சிறகு முளைத்ததும் அது தானாகவே பறந்துவிடும். அவ்விதமே அவனும் அனாதை விடுதியின் மதிலால் ஏறிக் குதித்து எப்படியோ கொழும்பு நகருக்குச் சென்று விட்டான். அங்கு ஓர் அங்காடி தேனீர் கடையில் அவனுக்கு வேலை கிடைத்தது.

அவன் மிகவும் வாட்டசாட்டமாகவும், துடிப்பாகவும் இருந்ததால் கடை முதலாளி அவன் மேல் நல்ல திருப்தி கொண்டிருந்தார். நாள் செல்ல செல்ல கொழும்பு நகரின் நாலாம் குறுக்குத் தெருவில் அவனும் பிரபல்யமானான். அவனது விசுவாசத்தை சகல வழிகளிலும் அவதானித்த முதலாளி அவனுக்கென்று சில வியாபார பொறுப்புக்களை வழங்கினார்.

மேலும் அவர் கூட சிறு வயதில் பெற்றோருடன் மனஸ்தாபப்பட்டு கிராமத்திலிருந்து கொழும்புக்கு வேலை தேடிச் சென்றவரே. அவர் மாத்திரமல்ல அங்குள்ள அனேகம் பேர் தம் வீட்டு வாழ்க்கையை வெறுத்து சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற நோக்கில் அங்கு வேலை தேடிச் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களில் பலர் இன்று பெரும் வர்த்தகர்களாகவும், தாதாக்களாகவும் இருப்பதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. அங்கு 'துணிவே துணை' என்று வாழ்பவர்கள் பலர். அந்த முதலாளி அவனை தனது சகோதரன் போன்று கவனித்து வந்தார். அவரது தேனீர் கடையில், ஒரு பகுதியில் செவ்விளனி வியாபாரத்தை தனியாகச் செய்யும் பொறுப்பை அவனுக்கு கொடுத்திருந்தார்.



அவனின் அதிர்ஷ்டத்தில் அந்த வியாபாரம் மிகவும் திறம்பட இலாபத்தை அள்ளிக் கொடுத்தது. முதலாளிக்கு அவன் மேல் இருந்த நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்தது. அனேகமாக அவ்விதம் துடிப்பாக இயங்குபவர்கள் சிறிது நாட்களில் தாங்களாகவே முதலீடு செய்து தனியாகவே ஒரு கடையை நடாத்தக் கூடிய வல்லமையை பெற்றுவிடுவார்கள்.

அவ்விதமே வளர்ந்து கொழும்பு நகரில் சொந்தமாக கடை வைத்திருப்பவர்கள் பலர். அதுமாத்திரமல்ல சில வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்த அவ்வாறான பலருக்கு உதவியளித்து ஊக்குவித்தும் இருக்கிறார்கள்.

ஒரு நாள் அதிகாலை அந்த செவ்விளனி கடைக்குப் பொறுப்பாக இருந்த அவனை காவல் துறையினர் கைது செய்து நீதி மன்றத்திற்கு முன் கொண்டு சென்றனர். அதை அறிந்த அவனது முதலாளி பதறியடித்துக் கொண்டு அவனை பிணையில் மீட்க நீதிமன்றம் சென்றார். ஆனால் முடியவில்லை.

மேலும் அவன் செய்த குற்றம் என்னவென்று கூட அவரால் அறிய முடியவில்லை. அவன் ஆறு மாதங்கள் வெளிக்கடை சிறையில் தண்டனை அனுபவித்தான். விடுதலையான பின் நாலாங் குறுக்குத் தெருவுக்கு மீண்டும் செல்ல அவன் மனம் விரும்பவில்லை. அது மட்டுமல்ல தனக்கு புகழிடம் கொடுத்த முதலாளியின் முகத்தைக் கூட பார்க்க அவனது மனம் இடம் கொடுக்கவில்லை.

அன்று அவன் செய்த குற்றம் இதுதான். செவ்விளனீரை முற்றாக அகற்றிவிட்டு அதற்கு பதிலாக அதில் கள்ளச்சாராயம் இட்டு விற்பனை செய்ததே. அவனது முதலாளியும் அது பற்றி பின்னர் அறிந்து கொண்டார். அவன் அதன் பின் தொடர்ச்சியாக பல குற்றச் செயல்களை புரிய ஆரம்பித்தான். அவனுக்கு ஒத்தாற் போல் பல தீய நண்பர்களின் சகவாசமும் மனத்திருப்தியாக அவனுக்கு கிடைத்தது. இனி கேட்க்கவா வேண்டும், அவனும் ஒரு குட்டி தாதாவாக மாறினான், அந்தப்பகுதியில்.

அந்த குட்டி தாதாவின் குற்றச் செயல்களின் காரணமாக நீதிமன்றில் பல வழக்குகள் குவிந்ததையடுத்து சுமார் பத்து வருடங்கள் தொடர்ச்சியாக வெளிக்கடை சிறைக்கம்பிகளை ஒவ்வொன்றாக எண்ணுவதற்கு நேர்ந்தது. எந்தவொரு நண்பனும் அவனை போய் எட்டிப்பார்க்கவே இல்லை. மேன்முறையீடு செய்வதற்கு கூட நாதியற்றவனாக சிறையில் வாடினான்.

இருப்பினும் இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவனுக்கு வெளியில் வர சந்தர்ப்பம் கிடைத்தது. 'சேர் நான் பொயிற்று வாறன்' என சிறை பொறுப்பதிகாரியின் காலில் விழுந்து கும்பிட்ட வேளையில், அவனை தோளில் பிடித்து தூக்கிய அவர் அப்படிச் சொல்லக் கூடாது, பொலிஸ் நிலையம், நீதிமன்றம், ஆஸ்பத்திரி, சிறைச்சாலை ஆகியவற்றிலிருந்து புறப்படும் போது 'போறன்' என்று மாத்திரமே சொல்ல வேண்டுமென, அறிவுரை கூறி 'இனிமேல் நல்ல நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள். நீ ஆடிய ஆட்டம் எல்லாம் இத்துடன் நிறுத்திக் கொள்' என மேலும் புத்திமதி சொல்லி வழியனுப்பிவைத்தார்.

வெளியில் வந்த அந்த குட்டி தாதாவான அவன் தனது வாழ்க்கையை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள திட சங்கற்பம் பூண்டான். அவனிடம் கைவசம் இரண்டு திட்டங்கள் இருந்தன. அவனுக்கு அன்பு செலுத்த, அவனை கவனிக்க, நிச்சயம் ஒரு துணை தேவை. அதாவது திருமணம். இரண்டாவது நன்றாக உழைத்து நல்ல சுகபோகத்துடன் சாகும்வரை வாழ வேண்டும்.

இவை இரண்டுமே அவனது முக்கிய அவசர, திட்டங்களாக இருந்தன. பத்து வருடங்கள் சிறையிலிருந்த போது உழைத்த பணம், ரூபா இருபத்தையாயிரம் அவனுடைய புத்தம் புதிய வாழ்க்கைக்கு நல்லதொரு மூலதனமாக அமைந்து இருந்தது. தனது முதலாவது திட்டத்தை எப்படியோ நிறைவேற்றிக் கொண்டான். அதுதான் அவனது திருமணம்.

அவன் தனது வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுத்த பெண் வேறு யாருமல்ல அவனைப் போன்று பல தடவைகள் சிறைக்குச் சென்று வந்த ஒரு பெண் கைதி. மேலும் அவள் ஒரு விபச்சாரியும் கூட. சிறைக் கைதிகளாக இருந்த பொழுதே இவர்கள் இருவருக்கும் மத்தியில் காதல் மலர்ந்தது. வெளிக்கடைச் சிறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பிறம்பான சிறைக் கூடங்கள் இருந்தாலும் சிரேஷ்ட சிறைக் கைதிகள் என்ற வகையில் உத்தியோகத்தர்களின் உதவியுடன் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்பு அங்கு இருந்தது.

கணவன் மனைவியான பின் இருவரினது குறிக்கோள்களும் ஒன்றாகவே இருந்தது. கடவத்தை பகுதியில் வாடகைக்கு வீடொன்றை பெற்று அங்கு குடித்தனம் நடத்தினார்கள். அந்த புதிய தம்பதிகள். அவர்கள் இருவருக்கும் உறவு என்று சொல்லிக் கொள்ள அயலவர்கள் மாத்திரமே இருந்தனர். புதிய வாழ்க்கையை ஆரம்பித்த அவர்களின் நோக்கங்கள் ஒன்றாக இருந்ததன் காரணமாக மனச்சந்தோசத்துடன் காலம் கழிந்தது.



அயல் கிராமப் புறங்களில் அனாதரவாக விடப்பட்ட பாழடைந்த வீடுகளை மிகக் குறைந்த விலையில் விலைக்கு வேண்டி அவற்றை நவீனமயப்படுத்தி சில காலம் அந்த வீடுகளில் வாழ்ந்துவிட்டு நல்ல விலைக்கு விற்பதே அவனது தொழிலாக இருந்தது.

அந்த தொழிலுக்கு அவனது மனைவி மிகவும் ஒத்தாசையாக இருந்து வந்தாள். அவள் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்ததினால் வறுமையின் காரணமாக விபச்சார தொழிலில் ஈடுபட அன்று நிற்பந்திக்கப்பட்டாள். இன்று சகலவற்றையும் கைவிட்டு தனது மனதிற்கு பிடித்தவனை கைப்பிடித்து சகல சுக போகங்களுடன் வாழ்ந்து வருகிறாள். அவன் வழமையாக புரிந்து வந்த் தொழிலை கைவிட்டு அதை விட அதிக பணம் சம்பாதிக்கும் தொழிலில் ஈடுபட்டான். தற்பொழுது அவனிடம் சகலதும் நிறைந்து உள்ளன. சொந்த வீடு, வாகனம் மற்றும் தேவையான அனைத்தும் அவன் வசம் காணக்கூடியதாக இருந்தன.

சிறையை விட்டு வெளியில் வரும்பொழுது அவனிடம் இருந்த இரண்டு கனவுகளும் இன்று நனவாகிவிட்டன. அது மாத்திரமல்ல அவன் இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையும் கூட. அதைவிட அவனுக்கு வேறென்ன வேண்டும்? தானும் தனது மனைவியும் அன்று வாழ்ந்த கீழ்த்தரவாழ்வு தனது பிள்ளைகளுக்கு அமையக் கூடாதென்பதே அவனின் நாளாந்த, நிரந்தர பிரார்த்தனையாக இருந்தது.

இறைவனின் படைப்பில் எத்தனையோ வித்தியாசமான கதாபாத்திரங்களை காணக்கூடியதாகவுள்ளது. அவர்களிடம் உள்ள பணம் சகலவற்றையும் மறைத்து சமூகத்தில் நல்ல அந்தஸ்த்தையும் வழங்கியுள்ளது. அவர்கள் இருவரும் தங்கள் இரு பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்து செயல்பட்டனர். அதிர்ஷ்ட தேவதை கூட அவர்களுடனே இருந்து வந்து அவர்களை மென்மேலும் மேம்படுத்தினாள்.

தாங்கள் இருவரும் வாழ்ந்த வாழ்க்கையை என்றுமே தங்கள் பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தியதே இல்லை. அந்த பிள்ளைகளும்




தாம் உயர்ந்த அந்தஸ்த்தைக் கொண்ட சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதை மனதில் வைத்து சமூகத்தில் அந்தஸ்த்து கூடியவர்களுடன் உறவுகளை வைத்துக் கொண்டதால் தவறுகள் இடம் பெற அங்கு வாய்ப்புக்கள் இருக்கவில்லை. மேலும் அவர்களது பெற்றோரின் பூர்வீகம் அங்குள்ள அயலவர்களுக்கு தெரியாததினால் அவர்கள் என்றுமே பெரிய இடத்து பிள்ளைகளின் வரிசையில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

எஞ்சியுள்ள வாழ்நாளை தம் பிள்ளைகளுடன் மிக சிறப்பாக, அதுவும் வெளிநாட்டில் வாழ முழுக் குடும்பமும் ஏகமனதாக தீர்மானித்திருந்ததால் உலகின் வல்லரசான அமெரிக்காவை தேர்ந்தெடுத்து அங்கு சென்று வாழ பறந்தனர்.

- மலையூரான் -

## நேர்மையின் மறு உரு



சீனாவில் Mr Lei என்ற டாக்ஸி டிரைவர் ஒருவரின் நேர்மை குறித்து நாடே பெருமையாக பேசுகிறது. அவரது டாக்சியில் பயணம் செய்த பயணிகள் இருவர் 170,000 சீன யான் பணத்தை தவற விட்டு சென்றுவிட்டனர். ஆனால் அந்த டாக்சி டிரைவர் அந்த பணத்தை உரியவரிடம் நேர்மையாக சேர்த்தார்.

அவருக்கு 10,000 யான் பரிசாக கொடுக்க முன்வந்தனர் பணத்தைத் தொலைத்தவர்கள். ஆனால் Mr Lei, அந்த பரிசை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். தன்னுடைய டாக்சியில் பயணம் செய்தவர்கள் யாரும் பணத்தை தொலைத்த அனுபவத்தை பெறக்கூடாது என்பதே தனது விருப்பம் என்று தெரிவித்தார். சமூக வலைத்தளத்தில் அவருடைய பெயர்தான் அதிகம் பகிரப்பட்டதாக கூறப்படுகிறது.

## கொலம்பஸின் சாந்தா மரியா

500 ஆண்டுகளுக்கு முன் உலகை கப்பலில் சுற்றிவந்த கொலம்பஸ், மூன்று கப்பல்களில் மாறி மாறி பயணம் செய்ததாக வரலாறு கூறுகிறது. இந்த கப்பல்களில் ஒன்றுதான் சாந்தா மரியா என்ற கப்பல். இந்த கப்பல் கடந்த 500 ஆண்டுகளுக்கு முன் சிதைந்து போய் கடலில் மூழ்கியதாக கூறப்பட்டது.



தற்போது இந்த கப்பல் கரீபியன் தீபகற்ப பகுதியில் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கபட்டுள்ளது. கற்பாறை ஒன்றின் இடுக்குப்பகுதியில் சுமார் 15 அடி ஆழத்தில் சிக்கியிருக்கும் இந்த கப்பலின் சிதைந்த பாகங்களை மீட்க ஆராய்ச்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர். இது சாந்தா மரியா கப்பல் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும், இதை மீட்டு, அமெரிக்காவை கண்டுபிடித்த கொலம்பஸ் புகழுக்கு பெருமை சேர்ப்போம் என்று ஆராய்ச்சி குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய விதை

சிறுகதை

முதலில் ஒரு சொம்பு உருண்டு வந்து குருக்கள் வீட்டுக்கு எதிரே தெருவில் விழுந்தது. அதைத் தொடர்ந்து டம்ளர் "டங்டங்... டங்...ட...ங்" என்று நொந்துகொண்டு தன் ஒலியை நிறுத்திக் கொண்டது.

ஜாதகத்தைப் பிரித்து வைத்துக் கணித்துக் கொண்டிருந்தவரால் நடப்பது என்ன என்பதைக் கணிக்க இயலவில்லை. "நாராயணா...



நாராயணா" என்று சன்னமாக நாராயணனைத் துணைக்கு அழைத்தார்.

"என்ன சாமி... பயந்துட்டீங்களா... ஒண்ணும் பயப்படாதீங்க. இது மாசத்துல நாலு தடவை நடக்கற கூத்துதான். நீங்க இங்கே குடிவந்து ஒருவாரம் தானே ஆகுது. இது புதுசாத்தான் தெரியும்." குருக்களிடம் ஜாதகம் பார்க்க வந்திருந்த முருகன்தான் சொன்னான்.

குருக்கள் யாருன்னு தெரியாதில்லையா..? பெருமாள் கோயிலுக்குப் புதிதாய் வந்திருக்கிற அர்ச்சகர்தான் வேதாந்த குருக்கள். கோயில் தெருவிலேயே கோயிலுக்குச் சொந்தமான வீடுகளில் ஒன்றை குருக்களுக்கு ஒதுக்கியிருந்தது நிர்வாகம். அவர், அவரது மனைவி, ஒரு மகள் என்று மூன்று பேர்தான் குடும்பம்.

"சொம்பு, டம்ளர் எல்லாம் ஏன் ரோட்டுக்கு வந்து விழுது? அவா யாரு?" என்று கேட்டார் குருக்கள்.

"அவன் ஒரு குடிகாரன் சாமி... அவங்க அப்பன் இந்தக் கோயில்லே வேலை செஞ்சிக் கிட்டிருந்தப்போ இந்த வீட்டைக் கொடுத்தாங்க. நாப்பது ஐம்பது வருஷமா இங்கே குடியிருக்கானுங்க. வெறும் நூறு ரூபா வாடகையில்! பிரஸ்லே வேலை செய்யிறான். பொண்டாட்டி புருஷனுக்கு சண்டை வந்துட்டா வீட்டுலே இருக்கிற சாமானெல்லாம் ரோட்டுக்கு வந்துடும். கொஞ்ச நேரத்துலே அவனோட சம்சாரம் வந்து எல்லாத்தையும் பொறுக்கி கிட்டுப் போவா..."

"அவன் என்ன மனுஷாளோட சேர்த்தியா? சண்டைன்னு வந்துட்டா இப்படியெல்லாம பண்ணுவான்?"

"இன்னும் என்னவெல்லாமோ பண்ணுவான். அவனை யாரும் கண்டுக்கிறதில்லே."

குருக்கள் சிறிது நேரம் யோசிச்சுண்டே இருந்தார். பிறகு முருகனுடைய ஜாதகத்தைப் புரட்டினார். காகிதத்தில் எதைஎதையோ எழுதிக் கூட்டினார். வெற்றிலை பாக்கை எண்ணினார். அந்தக் கூட்டலையும் காகிதத்தில் குறித்துக் கொண்டார். கணக்கை சரி பார்த்துக் கொடுத்தபின் முருகனைப் பார்த்து, "முருகா, நான் ஒன்னைச் சொல்றேன் செய்வியா?" என்றார்.

"சொல்லுங்க சாமி கண்டிப்பா செய்யிறேன்"

குருக்கள் சொன்னதைக் கேட்டு முருகன் சரி என்று தலையாட்டிக் கொண்டே எழுந்து நின்றான்.

தெருமுனை திரும்பியதும் சொல்லி வைத்த மாதிரி பீடி புகைக்குள் முகத்தை மறைத்துக் கொண்டு குடிகாரன் வந்து கொண்டிருந்தான். அவனிடம் எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று முருகன் யோசிக்கும் முன்பே,

"என்ன அண்ணே... நோட்டு புக்கும் கையுமா இந்தப் பக்கம்?" என்று ஆரம்பித்தான் ராமசாமி.(குடிகாரனின் பெயர்)

"அடடே! ராமசாமியா...நல்லா இருக்கிறியாப்பா? பிரஸ்ஸுக்குப் போகலியா?

"இன்னைக்கு ஞாயித்துக்கிழமை லீவுண்ணே"

"ஆமா இல்லே. அது ஒண்ணும் இல்லே ராமசாமி. உங்க வீட்டுக்கு எதிர்வீட்லே புதுசா கோயில் குருக்கள் குடி வந்திருக்காரில்லையா. அவரு ஜோசியம் நல்லா இருக்கறது, இருக்றபடியே சொல்றாருப்பா. அதான் போயி பார்த்துட்டு வர்றேன்" என்று ஜாதக நோட்டை தூக்கிக் காட்டினான் முருகன்.

"அதெல்லாம் நடக்குதாண்ணே. சாஸ்திரம் பொய்யி... சாவறது மெய்யி"ன்னு தத்துவம் பேசினான் ராமசாமி. "சொல்றேன்னு தப்பா நினைக்காதே ராமசாமி. கோள்களோட வினைதான் நம்மை ஆட்டிப்படைக்குது. சத்தமாக சிரித்தவாறே நடக்க எத்தனித்தான் ராமசாமி.

"ஒரு நிமிஷம் நில்லுப்பா. நீ ரொம்ப நல்லவன்தான். அப்படியிருந்தும் உனக்கும், உன் பொண்டாட்டிக்கும் அடிக்கடி சண்டை வருதே அது ஏன்? கோபப்படாதே. அதுதான் கோள்கள் செய்யிற வேலை. உங்க ரெண்டு பேரோட ஜாதகத்தையும் எடுத்துனுப்போயி குருக்கள்கிட்ட காட்டு. அதுக்குப் பரிகாரம் சொல்வாரு."

முருகனை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, "சரி பார்க்கிறேன்" நகர்ந்தான் ராமசாமி.

வீட்டிற்குள் நுழைந்தவன் தன் மனைவி தலைவிரிக்கோலமாக உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கவனித்தான். கன்னங்களில் கண்ணீர் கோலமிட்டுக் கொண்டிருந்தது. தாழ்வாரத்திலிருந்த மரநாற்காலியில் அமர்ந்து கொண்டான். அனிச்சையாக கை பீடியின் கழுத்தைப் பிடித்து இழுத்தது. கொளுத்திக்கொண்டான். புகை ஆரிக்கிள்களை நிரப்பி வெளியேறியது. எதையோ அவன் யோசிக்கலானான்.

ஒரு மனிதன் தீயவனாவதற்கு ஒரே ஒரு நிமிடம் போதும். அந்த நிமிடத்திலேயே அவன் தீய செயலைச் செய்துவிட முடிகிறது. பிறகு நிதானமாக யோசிக்கும்போதுதான் அவன் செய்த தவறே அவனுக்குப் புரிகிறது. கொஞ்சம் சிந்திக்கும் போது நல்ல தீர்வு கிடைக்குமல்லவா?

ராமசாமி தனக்குள் எதையோ பேசிக்கொண்டான். இருவரின் ஜாதகங்களையும் எடுத்துக் கொண்டு குருக்கள் வீட்டிற்குப் புறப்பட்டான்.

"சாமி... சாமி"

"யாரது?..." குரலை மட்டுமே வாசலுக்கு அனுப்பினார் குருக்கள்.

"நான் எதிர்த்த வீட்டு ராமசாமி வந்திருக்கேன்."

குருக்கள் ஒரு நொடி ஆச்சரியப்பட்டார். "குடிகாரன் அது இதுன்னு" சொல்லிண்டிருந்தா. இவன் சாதுவாட்டம் "சாமி"ங்கறானே. எப்படியோ இவனை நல்வழிக்குக் கொண்டுவரணும் பகவானே! எழுந்து நடைக்கு வந்தார்.

"என்ன விஷயம் ஒக்காருங்கோ."

"ஜாதகம் பார்க்கணும் சாமி. வெத்தலை பாக்கு வாங்கிட்டு வரலே. போயிட்டு வாங்கி வந்துடறேன்."

"பரவாயில்லை ஒக்காருங்க. ஜாதகத்தைக் கொடுங்க."

நீட்டினான். குருக்கள் பிரித்து எதையோ கூட்டிக் கழித்தார். பின் ராமசாமியைப் பார்த்தார்.

"உங்களோடது மகர ராசி. அவிட்ட நட்சத்திரம். இரண்டாம் பாதம். வீட்டுக்காரியோட ராசியும் மகரம்தான். நட்சத்திரமும் அவிட்டம் இரண்டாம் பாதமே." "ஆமா சாமி."

"ரெண்டுமே ஏக ராசி... ஏக நட்சத்திரம். அப்படி இருக்கக்கூடாது. பொருத்தத்துலே அதமம் வருது. உத்தமம், மத்திமம் வந்தாக்கூட பரவாயில்லே. அதமம் வரக்கூடாது. அப்படி வர்றவா கல்யாணம் பண்ணிக்கக்கூடாது. வாழ்க்கை சரியா அமையாது. போராட்டமான வாழ்க்கையாயிடும்."

"உன் மனைவி உனக்கு சொந்தமா. அசலா?" "அத்தைப் பொண்ணு சாமி."

"அதான் சொந்தத்துக்குத் தோஷமில்லைன்னு சொல்லி கல்யாணம் பண்ணியிருக்கா. சரி போகட்டும். அது நடந்து முடிஞ்சுபோன சமாச்சாரம். 'விதி தவறாக இருக்குமானால் தெய்வம் கண்ணை மூடிக்கொள்ளும். அதற்காக அழுது பயனில்லை"ன்னு கவியரசர் கண்ணதாசன் சொல்லி யிருக்காரு. அதுபோல நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனி நடக்கப் போவதை பார்ப்போம்." "சரி சாமி."

"அவ ஜாதகத்துலே இருக்கிற ஒரு ரகசியத்தை உனக்குச் சொல்றேன். அதை புரிஞ்சு நடந்துப்பியா.?

"சொல்லுங்க சாமி நடந்துக்கறேன்."

அவனிடம் எதையோ சொன்னார் குருக்கள். அவன் உறைந்து போனான். கண்கள் லேசாகக் கலங்கின. கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கத்தானே செய்கிறது! ஒரு நிமிடம் அவனை அசைத்து விட்டது. நடுங்கியது. அடக்கிக் கொண்டான். "பரிகாரம் ஏதாவது?"

"விதியை நிர்ணயம் பண்றவன் பகவான். அவனை மீறி



பரிகாரமெல்லாம் ஒண்ணும் செய்யாது. நான் சொன்னதை செய்தாலே போதும்."

"நிச்சயமா செய்யிறேன் சாமி." கும்பிட்டு விடைபெற்றான் ராமசாமி. வீட்டுப்படி ஏறி உள்ளே சென்றவன் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் மனைவி அடுக்களையிலிருந்து காப்பி டம்ளரோடு அவனை நெருங்கி வந்தாள். மௌனமாக காப்பியை நீட்டினாள்.

"மீனா" என்றான் மெல்ல.

இருபதாண்டுக் கால வாழ்க்கையில் முதல் சில மாதங்கள் மட்டுமே அவளது பெயரைச் சொல்லி கூப்பிட்டிருக்கிறான். அதன் பிறகு, "கழுதை, நாயே, பேயே" என்று அடைமொழி கொடுத்தே ஆண்டுகளை ஓட்டியவன், இன்று அவளது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும் அவள் அதிசயப்பட்டுப் போனாள். உள்ளுக்குள் பயமிருந்தாலும் மனம் ஏதோ ஒரு சந்தோஷக் குளியல் போட்டது. பெண்களுக்கே உரிய ஒரு நளினம் கடைக்கண் பார்வையை வீசுவதுதானே! மெல்ல அவளும் வீசினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ காப்பிக் குடிச்சியா மீனா?" அவனது சன்னமான கேள்வி அவள் உடலைத் தென்றலாய்த் தழுவிச் சென்றது.

- பதில் சொல்லாமல் நின்றாள்.

காபியை வாங்கி கீழே வைத்தவன் அவளது கைகளைப் பற்றிக் கொண்டான். 'என்னை மன்னிச்சுடு மீனா. உன்னைப் புரிஞ்சுக்காம இத்தனைக் காலம் அட்டூழியம் பண்ணியிருக்கேன். அதை யெல்லாம் பொறுத்துக்கிட்டு நீ வாழ்ந்துகிட்டிருக்கே" அவனை அறியாமல் கண்ணீர் வெளியேறியது. அவள் அதிர்ந்து போனாள்.

"ஐய்ய! என்னங்க இது" என்று முந்தானையால் அவன் கண்ணீரைத் துடைத்தாள்.

"மீனா, இனிமே நீ எதற்கும் பயப்படாதே. முன்னை மாதிரி நான் நடந்துக்க மாட்டேன். தைரியமா எங்கூட நீ பேசலாம். எது வேணுமானாலும் கேக்கலாம். இனிமே நாம ஒற்றுமையா, நிம்மதியான வாழ்க்கை வாழலாம். இது சத்தியம். என்னை நம்பு மீனா.."

யானைக்குட்டியை பழக்கும்போது முதலில் ஒரு சங்கிலியால் அதன் காலைக்கட்டி வைப்பார்கள். அது முரண்டு பிடித்து அறுத்துக் கொண்டு ஓட முயற்சிக்கும். ஆனால் காலிலுள்ள சங்கிலி அதை அடக்கி விடும். அதனால் அறுத்துக்கொண்டு ஓட முடியாது. பெரிய யானையாக வளர்ந்த பின்னால் ஒரு சாதாரணக் கயிற்றை அதன் காலில் கட்டி வைப்பார்கள். ஆனால் யானையோ பல ஆண்டுகள் சங்கிலிக்குள் கட்டுண்ட ஞாபகத்திலேயே நம்மால் அறுக்க முடியாது என்று கட்டுக்குள் அமைதியாக இருக்கும்.

அதுபோல மீனா பல ஆண்டுகள் சித்ரவதைகளை அனுபவித்தளாயிற்றே! அவளால் அதைத் தாண்டி எளிதில் வரமுடியவில்லை. அந்தப் பயம் அப்படியே ஒட்டிக் கொண்டிருந்தது. இருந்தாலும் மனைவியின் ஆறுதல் வார்த்தைகள் கணவனுக்கு இதம் தருகிறதல்லவா? அதற்காக அவள் பேசலானாள்.



"அப்படியெல்லாம் பேசாதீங்க. உங்க மனசு ஏன் அப்படி நினைக்குது? ஆண்டவன் இனிமேலாவது நம்ம வாழ்க்கையை நல்லபடியா வைக்கட்டும்" என்றாள்.

முருகன் குருக்களை நோக்கி ஓடோடி வந்தான். குருக்கள் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். "என்ன சாமி! என்ன மாயமந்திரம் பண்ணீங்க? ராமசாமி அடியோட மாறியிருக்கிறான். நெற்றி நிறைய விபூதி பூசியிருக்கிறான். கோயில் குளம்"னு பொண்டாட்டியோட சுத்தறான். ரொம்ப சாதுவாயிருக்கான். குடியைக் கூட விட்டுட்டானாம்! சண்டைசச்சரவு எதுவுமே இல்லே. என்ன சாமி பண்ணீங்க?"

"அது சரி சாமி, இத்தனை வருஷமா நடக்காத அதிசயம் நடந்திருக்கே. எப்படி?

"அதுதான் மனோதத்துவம். மந்திரம் கால். மதிமுக்கால்."

"முருகா! அசடாட்டம் கேள்வி கேட்டுண்டு இருக்காதே. மனுஷாளெல்லாம் எதற்குப் பயப்படறாளோல்லியோ மரணத்துக்குப் பயப்படுவாயில்லையா?"

"நிச்சயமா சாமி"

"உங்க ஜாதகப்படி உன் மனைவி இன்னும் இந்தப் பூமியிலே வாழப்போறதே நாலு மாசமோ, ஆறு மாசமோதான். அவளோட ஆயுள் அதோட முடியுது. இதைத் தடுக்க முடியாது. இந்தக் கடைசிகாலத்துலயாவது அவளோட சண்டைசச்சரவு இல்லாம, அவளுடைய ஆசைகளை நிறைவேத்தி வைப்பா. அவளை நிம்மதியா வச்சுக்கற வழியைப் பாருன்னு சொன்னேன்."

"ஐயோ பாவமே! அப்படியா இருக்கு சாமி? பாவம் அந்தப் பொண்ணு. எந்த சுகத்தையும் அனுபவிக்காமையே வாழ்ந்துட்டா."

"நான் சொன்னேன்னுதானே சொல்றேன். ஜாதகத்துலே அப்படி இருக்குன்னு சொல்லலையே!"

"என்ன சாமீ குழப்புறீங்க?"

"அவன் திருந்தி வாழணும்னா ஜாதகத்து மேலே பழியைப் போட்டாத்தான் நடக்கும்னு முடிவு பண்ணினேன். அவ ஆயுள் நல்லாத்தான் இருக்கு. சும்மா ஒரு பொய்யை சொல்லி வச்சேன். எப்படியோ ஆறுமாச காலம் அவன் திருந்தியவனா நடந்துக்கிட்டானா அதுவே பழக்கமாயிடும். அப்புறம் வாழ்நாள் முழுக்க நல்லவனாவே வாழ்ந்துடுவான்.

"சாமி..." அதற்குமேல் அவனுக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை.

நன்றி – தமிழ் கூடல்

# கவி முரசு

## நாளையும் கோழையும் பார்ப்பது நன்று

திங்கள் புதனும்
வியாழன் வெள்ளியும்
மங்கள வாழ்வுக்கு
வாய்ந்த கிழமைகள்!

கார்த்திகை ஐப்பசி
ஆவணி வைகாசி
நேர்த்தியமான மாதங்கள்
சுப செயல்களுக்கு!

அமிர்த சித்த
சுப யோகமும்
அசுப நேரமும்
தவிர்ந்த காலம்

மங்கல கருமங்களுக்கு
வாய்த்தது நன்று!

பங்குனி உத்தரம்
மங்கள வாழ்க்கைக்கு
பொங்கும் சுபநாள்
புத்தொளி பெறலாம்!

மரணயோகம் கரிநாளையும்
இராகு காலமும் தவிர்ப்பது
சுப காரியங்களுக்கு
சோதனை நிகழாது!

சேனையூர் - மூதூர் கிழக்கு

## சக்தி மிக்க நாக தெய்வம்

அற்புதத் திருத் தெய்வம் - சேனையூர்
அருள்மிகு ஸ்ரீ நாகாம்பாள்
அருள் தரும் நடமாடும் உயிர் தெய்வம்!
பற்பலரும் வந்து போற்றும்
படமெடுத்து ஆடும் தெய்வம்
நற்பதம் வழங்கும் சேனையூர்
நடமாடும் நாக தெய்வம்!
வாரம் ஞாயிறுப்பூசை பொங்கல்
வருடாந்த வைகாசி பொங்கல் விழா
மகிழ்வாக ஏற்கும் தெய்வம்
அழகான சேனையூர் பதியமர்ந்த
அருள் மழை பொளியும் தெய்வம்!

திருமணத் தடையை நீக்கி
சித்தி அருளும் தெய்வம்
சேனையூர்
சிறப்புப் பெற்றுயர திருவருள்
தரும் தெய்வம்!
புத்திர தோசம் நீக்கும்
நாகம்மாள்
சக்தி மிக்க தெய்வம் சித்தி
புத்தி முத்தி அருளும் நாகம்

சேனையூர் - மூதூர் கிழக்கு



## இன்பம்

- தாமரைத்தீவான் -
ஈச்சந்தீவு - கிண்ணியா

கற்பவை கற்றல் இன்பம்!
கற்றபின் நிற்றல் இன்பம்!
நற்றமிழ் வரைதல் இன்பம்!
நாவினால் இசைத்தல் இன்பம்!

குறள் மரபுரைத்தல் இன்பம்!
கூறி நெஞ்சிருத்தல் இன்பம்!
அறம் - பொருள் - மூன்றாம் பாலோ
அதி வியப்பான இன்பம்!

கழகநூல் கற்றல் இன்பம்!
கருத்தினை விளங்கல் இன்பம்!
பழமை ஓர் புதிய இன்பம்!
பகிர்வது மேலும் இன்பம்!

பாவேந்தர் பாடல் இன்பம்!
பாரதி கடைப்பா இன்பம்!
நாவேந்தர் அண்ணா நூலின்
நடை ஒரு தனிப் பேரின்பம்!

## குறைந்தபட்சம்

மூச்சுக்குழாய்கள் ஓய்வடைந்து
என் சுவாசப்பரிமாற்றம் நிகழ்வதற்கேனும்
ஒரு சில நிமிடங்களாவது
உன் உதடுகளை நகர்த்து
உன் வியர்வை நாற்றங்களையும் தாண்டி
சுவாசிக்க ஆசைப்படுகிறேன்

அந்த மூன்று நாட்களிலேனும் உனதான
ஓய்விற்கேனும்
புணர்தலை நிறுத்து
என் யோனித்தரிப்புகள்
மரத்துப்போயின

அடக்குமுறையின்
அடையாளப்படுத்தலாக
மேற்கூறியவற்றோடு
மேலும் சிலதையும்
மறுத்தாலும் பரவாயில்லை

உன் அல்லது என்
ஆயுட்துளியின்
ஒரு நொடியிலேனும்
முலைகளையும் யோனியையும்
கடந்து
பெண்மையின் அடையாளங்களை
உணர்ந்து கொள்.

- பத்மபிரதன் -



# மூதூர் பட்டித்திடலின் நவீன யுகக் கல்லாவணங்கள்

**பாகம் : 01**

வரலாற்றைத் தேடும் பயணங்களில் பல சுவையான நிகழ்வுகள் இடம்பெறுவதுண்டு. அவ்வாறான ஒரு சம்பவம் அண்மையில் நிகழ்ந்தது.



நண்பர் வைத்தியகலாநிதி சதீஸ்குமார் அவர்கள் வெருகலில் தமிழர் வரலாற்றாதாரங்கள் தேடும் பயணமொன்றை ஒழுங்கு செய்திருந்தார்.

பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் "இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - பகுதி 2" திருகோணமலையில் வெளியிடப்பட்ட பின்னர் அவருடன் இணைந்து இந்தப் பயணம் ஆரம்பித்தது.

இதில் கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவர்களான திரு.தனுராஜன், திரு.பசில், திரு.செல்வகுமார் ஆகிய மூவரும் ஆர்வத்துடன் இணைந்திருந்தனர். வழமை போலவே குறுகிய நேரத்தில் மிக விறுவிறுப்பாக நடந்தேறிய பயண நிகழ்வுகள் வாழ்வில் மறக்க முடியாதவையாகும்.

வெருகல் நோக்கிய எமது பயணத்தில் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு தகவல் குறிப்பின் அடிப்படையில் பட்டித்திடல் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்குச் சென்றிருந்தோம்.

திருகோணமலை மூதூரில் இருந்து 10 KM தூரத்தில் இந்த பட்டித்திடல் கிராமம் அமைந்துள்ளது. மல்லிகைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள இந்தக் கிராமம் பல இடப்பெயர்வுகளையும், படுகொலைகளையும் முன்னைய காலங்களில் சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள ஆலயத்தில் தற்பொழுது திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றது. எதிர்பார்த்தது போலவே அங்கு நான்கு நவீனயுகக் கல்வெட்டுக்கள் கிடைத்தன.

பண்டையகாலங்களில் நிகழ்ந்த நிகழ்வுகள், போர்வெற்றிச் செய்திகள், ஆலயங்களுக்கான தானங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளை கற்சாசனங்களில் பொறித்து வைக்கும் வழக்கம் இருந்தது நாம் அறிந்ததே. அதுபோலவே 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களும் சில முக்கிய செய்திகளைப் பதிவு செய்ய கல்வெட்டுக்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதனை ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் இவை.

அண்மைய நாட்களில் பழுகாமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இறப்புத்தொடர்பான கல்வெட்டுக்களும் இந்த வகையைச் சேர்ந்தனவையே என்பது குறிப்பிடத்தக்கது.

வாசலில் உள்ள கற்தூண் 21.09.1976 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆலய கும்பாவிஷேக நிகழ்வினை பதிவு செய்திருக்கிறது. க(கொ)டுமையான யுத்தம், பலமுறை இடம்பெற்ற இடப்பெயர்வுகள் என்பனவற்றைத் தாண்டி இச்செய்தி இன்று நமக்குக் கிடைக்கிறது.



இதுதவிர ஆலயச்சூழலில் மூன்று கல்வெட்டுக்கள் அவ்வாலயப் பெயரினைத் தாங்கிக் காணப்பட்டது. இவற்றில் ஒன்றில் 1960 ஆம் ஆண்டெனப் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றினைப் பார்வையிட்ட பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் 1960 ,1976 காலப்பகுதியில் வாழ்ந்த மூதூர் பட்டித்திடல் மக்கள் தங்கள் ஆலய நிகழ்வுகளைப் பண்டைய நாட்களைப்போல கல்வெட்டுக்களாகப் பொறிக்கும் ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதனை இதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது என்றார்.



அத்துடன் கல்வெட்டுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் கற்கள் பட்டித்திடலில் இருந்த புராதானமான ஆலயமென்றினைச் சேர்ந்தவையாக இருக்கலாம் எனத்தான் கருதுவதாகவும் கூறினார்.

தமிழர் வரலாற்றாதாரங்கள் தேடும் வெருகல் நோக்கிய பயணமொன்றின் வழியில் நவீனயுகக் கல்லாவணங்களைக் காணக்கிடைத்தது மகிழ்ச்சியாக இருந்தது.





வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்

## கொந்தளிப்பில் பிரபு



பாலிவுட்டில் மோகன்குமார் என்பவர் இயக்கிய அவதார் திரைப்படத்தின் பெயரைத்தான் ஜேம்ஸ் கேமரூன் தனது படத்தின் டைட்டிலாக பயன்படுத்தியுள்ளார். இதை அனுமதிக்கும் ஹாலிவுட் திரைப்படங்கள் தன்னுடைய ஆக்சன் ஜாக்சன் திரைப்படத்திற்கு பெயரை மாற்ற கட்டாயப்படுத்துவது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரபுதேவா தற்போது பாலிவுட்டில் ஆக்சன் ஜாக்சன் என்னும் திரைப்படத்தை அஜய் தேவ்கான், சோனாக்ஷி சின்ஹா நடிப்பில் இயக்கி வருகிறார். இந்த திரைப்படத்தின் ஆக்சன் ஜாக்சன் என்னும் டைட்டிலை பயன்படுத்த கூடாது என ஹாலிவுட் பட நிறுவனம் ஒன்று சமீபத்தில் பிரபுதேவாவுக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. எனவே இதுகுறித்து பிரபுதேவா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவதார் திரைப்படத்தின் பெயரை மாற்றினால் தன்னுடைய படத்தின் பெயரையும் மாற்றுவதாக பிரபுதேவா கூறியுள்ளார்.

## சூர்யாவின் அடுத்த நாயகி

வருத்தப்படாத வாலிபர் சங்கம் திரைப்படத்தில் அறிமுகமான ஸ்ரீதிவ்யா, சூர்யாவின் அடுத்த படத்தின் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக



கூறப்படுகிறது. வெங்கட்பிரபு இயக்கும் சூர்யா படத்தில் கதாநாயகியாக நடிக்க ஸ்ரீதிவ்யா, 'ரூ.40 லட்சம் சம்பளத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

தற்போது முன்னணி நடிகையாக மாறிவரும் ஸ்ரீதிவ்யா, தனக்கு ரஜினி மற்றும் மணிரத்னம் படங்களில் நடிப்பது ஒன்றுதான் ஒரே லட்சியம் என்றும் கூறியுள்ளார்.

## ஏன் இந்நிலை!!



இயக்குனர் செல்வராகவனுடன் திருமணம் ஆகி, பின்னர் விவாகரத்தும் பெற்ற நடிகை, விவாகரத்துக்கு பின்னர் மீண்டும் சினிமாவில் சான்ஸ் தேடி தீவிர முயற்சி செய்தார். ஆனால் அவருக்கு சொல்லிக் கொள்ளும்படியான வாய்ப்பு அமையவில்லை. தற்போது தெலுங்கு படம் ஒன்றில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார் சோனியா அகர்வால். முதலில் ரூ.8 லட்சம் மட்டும் சம்பளம் பேசிய தயாரிப்பாளர் படப்பிடிப்பு பாதிக்கும் மேல் முடிவடைந்த போதும் இன்னும் ஒரு பைசா கூட சோனியா அகர்வாலுக்கு கொடுக்கவில்லையாம்.

சோனியா அகர்வால் சம்பளத்தைக் கேட்ட போதெல்லம் இதோ, அதோ என்று இழுத்துக்கொண்டு வந்தவர், தற்போது படம் வெளியாகி எப்படி வசூல் செய்கிறது என்பதை. பொருத்து சம்பளம் தருகிறேன் என்று கறாராக கூறிவிட்டாராம்.

## கோடி கேட்கும் பப்ளிமாஸ்

தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் பிசியாக இருக்கும் ஹன்சிகா, ரூ.50 லட்சம் சம்பளத்திற்கு "Pandaga Chaseko" என்ற தெலுங்கு படத்தில் நடிக்க சமீபத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

சிலநாட்கள் படப்பிடிப்பு முடிந்தவுடன் ரூ.1 கோடி சம்பளம் கேட்டதாக தெரிகிறது. ஒரு கோடி தராவிட்டால் நடிக்க வரமாட்டார் என ஹன்சிகாவின் தாயார் தயாரிப்பாளரை மிரட்டியதால், தயாரிப்பாளர் சில லட்சங்கள் நஷ்டம் ஆனாலும் பரவாயில்லை என்று கருதி ஹன்சிகாவை அதிரடியாக "Pandaga Chaseko" படத்தில் இருந்து நீக்கிவிட்டார்.

இதனால் ஹன்சிகா மற்றும் அவருடைய தாய் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தெலுங்கில் ஹன்சிகாவின் போட்டியாளர்களான தமன்னா, காஜல் அகர்வால் மற்றும் சமந்தா ஆகிய நடிகைகள் ஏற்கனவே ஒரு கோடி சம்பளத்தை தொட்டுவிட்டதால் தனது மகளின் சம்பளமும் இனி ஒரு கோடி 'ரூபாய்தான் என அவருடைய தாயார் பிடிவாதமாக இருப்பதால் ஹன்சிகாவை ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப் பாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



சுந்தர் சியின் நடிப்பில் வெளியாக இருக்கும் அரண்மனைக்கு பின்னர் தமிழிலும் ரூ.1 கோடி சம்பளம் கேட்க முடிவு செய்துள்ளாராம்.



• **மனைவியை குத்தாட்ட நடிகையாக மாற்றிய இயக்குனர்**

அடுத்து எடுத்துக்கொண்டிருக்கும் தபாங் 3 படத்திலும் மனைவியையே குத்து நடனம் ஆட வைக்க அர்பாஸ்கான் முடிவு செய்துள்ளார். அதுவும் பயங்கர கவர்ச்சி உடைகளுடன் கூடிய நடனம். நடனம் ஆடவரும் நடிகைகள் கேட்கும் ஒரு கோடியை மிச்சப்படுத்தத்தான்.

• **வடிவேலுவுக்கு ஜோடியாக த்ரிஷா**

தனக்கு ஜோடியாக நடிக்க பிரபல நடிகையிடம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும், செய்திகள் வெளிவருகிறது. வடிவேலுவின் ஹீரோயின் வேட்டையால் பிரபல நடிகைகள் அதிர்ச்சியில் உள்ளதாக கூறப்படுகி

• **முதன்முதலாக ஜோடி சேரும் பிந்துமாதவி**

அவர் நடிக்கும் வசந்த குமாரன் என்ற புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க பிந்துமாதவி ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

• **சந்தானம் கொடுத்த சக்சஸ் பார்ட்டி**

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படம் வெளியான அன்றே சக்சஸ் பார்ட்டி வைத்து அசரடித்திருக்கிறார்சந்தானம். இந்த பார்ட்டிக்கு முதல் அழைப்பு யாருக்கு தெரியுமா? மன்மதன் படத்தின் மூலம் தன்னை சினிமாவுக்கு அழைத்து வந்த சிம்புவுக்குத்தான்.

• **நட்டம் அடைந்தால் பணத்தை திருப்பித்தர ரஜினி சம்மதம்**

கோச்சடையான் படத்தால் திரையரங்கு உரிமையாளர்களுக்கு நட்டம் வந்தால் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக ரஜினி வாக்கு கொடுத்திருக்கின்றார்.

## அலற வைக்கும் மேனன்



நான் சிகப்பு மனிதன் படத்தில் விஷாலுடன் உதட்டுடன் உதடு சேர்த்து முத்தக்காட்சி ஒன்றில் நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார். வளரும் இளம் கதாநாயகி, லிப் கிஸ் காட்சியில் நடிக்கின்றாரே என்ற கேள்விக்கு அவர் கதைக்கு அந்த முத்தம் தேவை என்பதால் நடித்தேன் என்று சமாதானம் கூறினார்.

கதைக்கு தேவை என்பதால் இந்த படத்திலும் லிப் கிஸ் காட்சியில் நடிக்கும்படி தொந்தரவு செய்கின்றனர் தயாரிப்பாளர்கள். இயக்குனர்களின் சதியை புரிந்து கொண்ட லட்சுமிமேனன் தற்போது கதைக்கு தேவையென்றாலும், லிப் கிஸ் காட்சிக்கென்று தனியாக ஒரு தொகை கொடுத்தால்தான் அந்த காட்சியில் நடிப்பேன் என்று கூறி அலற வைத்துவிட்டார். அவர் முத்தக்காட்சிக்கு கேட்கும் தொகை அவருடைய சம்பளத்தில் பாதி என்பதால்தான் தயாரிப்பாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## மீண்டும் சேருகின்றனரா?



த்ரிஷா பிறந்தநாள் பார்ட்டியில் தான் சிம்புவை சந்தித்தது உண்மைதான் என்றும், அவரும் ஒரு சக நடிகர் என்ற முறையில்தான் அவருடன் பழகியதாகவும், தன்னுடைய வாழ்க்கையில் மீண்டும் ஒரு காதல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் கூறினார்.

சிம்புவும் பழைய கசப்பான சம்பவங்களை மறந்துவிட்டு தன்னிடம் நட்பாக இருக்கிறார் என்றும், தற்போது தனிமையை விரும்புவதாகவும், இரண்டு வருடங்கள் கழித்து பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளையை திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும் நயன்தாரா கூறியுள்ளார்.

## சமந்த ரகசிய திருமணம்

தற்போது விஜய்யுடன் கத்தி, மற்றும் சூர்யாவுடன் அஞ்சான் ஆகிய திரைபடங்களில் நடித்து வருகிறார். மேலும் விக்ரம் நடிக்கும் அடுத்த படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கின்றார்.

இந்நிலையில் சமந்தா நடிகர் சித்தார்த்தை ரகசிய திருமணம் செய்துகொண்டு சித்தார்த் வீட்டில் குடும்பம் நடத்துவதாக தெலுங்கு படவுலகில் கிசுகிசு கிளம்பியுள்ளது. மேலும்



சமந்தாவின் கால்ஷீட் விவகாரம் முழுவதையும் சித்தார்த்தின் அப்பாதான் கவனிக்கிறார் என்றும், கூறப்படுகிறது.

## லியோன் சூரியுடனா!!

விமல், சூரி மற்றும் பிரியா ஆனந்த் நடித்து வரும் ஒரு ஊர்ல ரெண்டு ராஜா திரைப்படத்தை இயக்குனர் கண்ணன் இயக்கி வருகிறார். இந்த படத்தில் தேசிய நெடுஞ்சாலை ஒன்றில் ஒரு குத்தாட்ட பாடல் வருவது போன்ற காட்சி எடுக்கப்பட உள்ளது.

இந்த குத்தாட்டத்திற்கு புகழ்பெற்ற நடிகை ஒருவர் ஆடினால் நன்றாக இருக்கும் என நினைத்த கண்ணன், தயாரிப்பாளருடன் ஆலோசனை செய்து



சன்னிலியோனை ஒப்பந்தம் செய்தார்.

ஒரு பாட்டுக்கு நடனம் ஆட ரூ.35 பெற்றுக்கொண்டு நடனம் ஆட ஒப்புக்கொண்டுள்ள சன்னி லியோன். ஜெய்யின் வடகறி படத்தில் சன்னிலியோன் ஒரு பாடலுக்கு நடனம் ஆடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி இல்லாப் பயணம்




ஓட்டுனர் இல்லாமல் இயங்கும் கார்களின் சோதனை ஓட்டம் அமெரிக்காவில் நடைபெற்றது.

பிரபல இணையதள நிறுவனம் கூகுள்லின் தயாரிப்பான இந்த கார்கள் சாலைகளில் பயணித்து பிரமிப்பை ஏற்படுத்தின. கலிபோர்னியா பகுதியில் மௌன்டைன் வியுவ் பகுதியில் நடைபெற்ற சோதனை ஓட்டத்தில் நான்கு கார்கள் பங்கேற்றன. முற்றிலும் லேசர், சென்சார் தொழில்நுட்பத்துடன் இயங்கும் கார்களில் முன்கூட்டியே நாம் செல்ல திட்டமிட்ட இடங்களை கணினியில் பதிவு செய்யப்படும்.

அதன் பின் கார்கள் புறப்பட்டு சாலைகளில் உள்ள சிக்னல்களில் நின்றும் வாகனத்துடன் பயின்றும் திட்டமிட்ட இடங்களுக்கு செல்கின்றன. இதைப்பற்றிய தொழில்நுட்பம் வரும் 2017ஆம் ஆண்டு வெளியிடப்படும் என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது.

## 8.1 ஸ்மார்ட்போன்



கணினிகளுக்கு புதிய இயங்குதளத்தினை வெளியிட்டுள்ள மைக்ரோ சாப்ட் நிறுவனம், அதன் பிறகு ஸ்மார்ட் போன்களிலும் புதிய இயங்குதளமான 8.1 அறிமுகம் செய்திருந்தது.

Nokia Lumia 1520 ஸ்மார்ட்போனில் இப்புதிய இயங்குதளம் செயல்படுகிறது. இது ஆரஞ்சு மற்றும் பச்சை வண்ணங்களில் வெளிவரவுள்ளது. Nokia Lumia 1520 Smartphone Specifications பார்க்கலாம்.

புதியதாக வெளிவரவுள்ள இப்போனில் 6 அங்குல தொடுதிரை, Quad-Core Snapdragon 800 Processor, முதன்மை நினைவாக 2GB RAM, 16 GB சேமிப்பு நினைவகமும் பெற்றுள்ளன.

வீடியோ, போட்டோக்கள் எடுக்க 20 மெகா பிக்சல் கேமராவும் இணைந்துள்ளது.

## பெயரில்லா Folder



கணனியில் பல வகையான FOLDER களை உருவாக்கி இருப்பீர்கள். ஆனால் அந்த FOLDER முக்கியமான FILES ஏதும் வைத்திருந்தால் அதனை அடுத்தவர்களின் கண்களில் இருந்து மறைப்பதே உங்கள் நோக்கமாக இருக்கும்.

இதற்கான இலகு வழி: முதலில் folder இல் Right கிளிக் செய்யவும். அதன் பின்னர் Right Click செய்ததன் பின் கீழுள்ளவாறு தோன்றும் அதில் Rename இல் Click செய்க. Rename என்பதை செயற்படுத்திய பின் "Alt" Key யுடன் '0160' என்பதை rename பாக்ஸ் இனுள் பதிவிடுக. இலக்கத்தினை வலதுபுறம் உள்ள Keypad மூலம் செயற்படுத்தவும்.

# விளையாட்டுப் பையன்

## compress க்கு மென்பொருள்




பொதுவாக அதிக கொள்ளளவு கொண்ட கோப்புகளை WinZip, 7-Zip போன்ற மென்பொருட்களின் துணையுடன் தான் கோப்புகளை Compress செய்து பயன்படுத்துவோம்.

இந்த மென்பொருளானது மேற்கண்ட மென்பொருட்களைக் காட்டிலும் பத்து மடங்கு குறைவான கொள்ளவு கொண்ட கோப்புகளாக மாற்றித் (compression) தருகிறது.

KGB அற்சிவேர் எனும் இம்மென்பொருளானது நம்முடைய கோப்புகளை மிக விரைவாக, குறைவான அளவுள்ள கோப்புகளாக மாற்றித் தருகிறது. 1GB அளவுள்ள கோப்புகளை வெறும் 10MB அளவாக மாற்றித்தருகிறது.

இவ்வாறு குறைந்த அளவாக compress செய்து தருவதால் அதிக கொள்ளளவு கொண்ட File களையும் எளிதாக பரிமாற்றம் செய்து கொள்ள முடிகிறது. இது விண்டோஸ் மற்றும் லினக்ஸ் இயங்குதளங்களை ஆதரிக்கிறது.

Compression அளவுகளை விருப்படி Very Weak, Low, Normal, Maximum, High என்னும் வகையில் நாம் அமைத்துக்கொள்ளலாம். இம்மென்பொருளை நிறுவ உங்கள் கணினியில் 1.5 GHz Processer, குறைந்த பட்சம் 256 MB Ram நிச்சயம் இருக்க வேண்டும்.

இம்மென்பொருளைக் கொண்டு compression செய்த File - களை இதே மென்பொருளைக் கொண்டுதான் விரிக்க முடியும். எனவே இம்மென் பொருளானது பெறுபவரிடமும் நிச்சயம் இருக்க வேண்டும். இம்மென்பொருளின் மூலம் வீடியோ கோப்புகளை compress செய்யமுடியாது.

மற்ற வகைக் கோப்புகளை எளிதாக Compression செய்து தருகிறது. மற்ற Compression Software களைக் காட்டிலும், கோப்புகளை குறைந்த அளவிற்கு சுருக்கித் தருவதால் இம்மென்பொருள் அதிக பயன்தரக்கூடிய ஒன்று.

## அகற்றியதை மீண்டும் பெற



கணிணி மற்றும் லேப்டாப் பயன்படுத்துபவர்கள் ஏதாவது ஒரு பைலினை தவறுதலாக டெலிட் செய்தால் அதனை ரீசைக்கிள் பின்னிலிருந்து மீண்டும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் பென்டிரைவ் மற்றும் மற்ற டேட்டா கார்டிலிருந்து ஒரு பைலினை டெலிட் செய்தால் அதனை மீண்டும் கொண்டுவருவது சிரமம். ஞாபக மறதிகாரர்கள் இவ்வாறு பைலினை டெலிட் செய்து பின்னர் அவதிக்குள்ளவர்கள். இவ்வாறு இவர்களின் சிரமம் நீக்குவதற்காக இந்த சின்ன சாப்ட்வேர் பயன்படுகின்றது. 650 கே.பி. அளவுள்ள இதனை பதிவிறக்கம் செய்து இன்ஸ்டால் செய்து உங்களுடைய பென் டிரைவ் மற்றும் ரீமுவபிள் டிரைவ்களில் பொருத்திக் கொள்ளவும்.

# ஒரு கொலையின் கதை

2–11

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

அக் கணணித்திரையில் கடவுச் சொல்லைத் தரும்படி அந்தக் கேள்வி எழுந்திருந்தது....

"உனக்கு ஞாபகம் இருக்கின்றதா தோழனே? அலிக சொன்ன கடவுச் சொல்"

உடனடியாகவே இறுக்கத்தைத் தளர்த்தப் புலனாய்வாளர் கேள்வியொன்றை ...........

..........................................................................

மற்றைய புலனாய்வாளரை நோக்கி எறிந்தார். அக்கேள்வியின் கருத்தை மற்றை புலனாய்வாளர் தெளிவாகப் புரிந்துகொண்டார். கடவுச்சொல் அவர்களிடம் இல்லை. மடிக்கணணியைப் பற்றியே அப்போதுதான் அவர்கள் தெரிந்துகொண்டிருந்தார்கள். அவ்வாறாயின் அதன் கடவுச் சொல்லைப்பற்றி எவ்வாறு அவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள்?

எனவே அந்தக் கேள்வி 'இரண்டாவது இரை' என்பதை அவர் புரிந்து கொண்டார்....

ஆனால் மீன் அந்த இரையைக் கவ்வத்தயங்கியது...

அந்தக் கணப்பொழுதில் அந்த இரண்டாவது புலனாய்வாளர் மீனை இரையை நோக்கி நகர்த்த முற்பட்டார்.

" ஆம் எனக்கு ஞாபகம் இருக்கிறது நண்பனே.... அக் கடவுச் சொல்லை அலிகவின் கைப்படவே எனது குறிப்புப் புத்தகத்தில் பதிந்துள்ளேன்..".

எனக் கூறியவாறே தனது குறிப்புப் புத்தகத்தின் தாள்களை மிக விரைவாகத் தட்டத் தொடங்கினார். அவருக்கு நன்றாகத் தெரியும் அந்தக் கடவுச் சொல் தனது குறிப்புப் புத்தகத்தில் இல்லை என்று.....

இடையில் சில நிமிடங்கள் கழிந்த பின்னர் அவர் மற்றைய புலனாய்வாளரை நோக்கி

" நண்பனே... அந்த குறிப்புப்புத்தகத்தை நான் நீதிமன்றின் பார்வைக்குச் சமர்ப்பித்துள்ளேன்.... என்ன செய்வது ...அலிகவின் போதாத காலம்...... அவனை மீண்டும் எமது கைக்கெடுத்து விசாரிக்க வேண்டிய விதத்தில் விசாரித்து கடவுச்சொல்லைப் பெற்றுக்கொள்ளுவோம்..... வேறு வழியில்லை நண்பனே....." என்றார் அவர்....

அலிகவின் மனைவியின் மனதில் அவரது வார்த்தைகள் சுருக்கெனத் தைத்தது....

"அலிகவின் போதாத காலமா........ மீண்டும் விசாரிக்க வேண்டிய விதத்தில் விசாரிப்பார்களா....? அதனை அலிக தாங்குவானா...... அந்த அவஸ்தைக்கு நானும் காரணமாக இருக்க வேண்டுமா? ...... எனக்குக் கடவுச் சொல் தெரியும்தானே... அதனை இவர்களுக்குச் சொன்னால் என்ன? நான் சொல்லாவிட்டாலும் இவர்கள் தெரிந்துகொண்டு விடுவார்கள் தானே...சொல்வதா? அன்றேல் சொல்லத் தேவையில்லையா........"

அந்த மீன் ஒரு அவஸ்தையான உணர்வை முகத்திலும் அதற்கொப்ப அசைவை உடலிலும் புலப்படுத்தியது..... மீனவர்களின் கண்கள் அதனைக் குறித்துக் கொண்டன.....

புலனாய்வாளர்கள் தமது சம்பாசனையைத் தொடரச் செய்தனர்...

"இவர்களுக்கு அந்தக் கடவுச் சொல் தெரிந்திருக்கும் என் நினைக்கின்றாயா?"

" இல்லை நண்பனே ... தெரிந்திருக்க வாய்ப்பில்லை.... இது அவனின் போதாத காலம்... அவனைப் பதம்பார்க்கத்தான் வேண்டியிருக்கும்..... என்ன செய்வது"

மீன் இரையை வேறவழியின்றிப் பார்த்துக்கொண்டிருந்தது.....

" அதுவும் சரிதான்..... அவன் அவஸ்தைப்பட இவர்கள் விரும்புவார்களா என்ன?..... தெரிந்திருந்தால் சொல்லியிருப்பார்கள் தானே....."

மீன் இரையை விழுங்கியது....

" சரி நண்பனே நாம் இந்த மடிக் கணணியையும் எடுத்துக் கொண்டு செல்லுவோம்.... அவனைக் கொண்டே திறக்கச் செய்வோம்....."

என்ற வார்த்தை முழுதாக முடியும் முன்னர் அந்தப் பெண் சில இலக்கங்களை தனது வாயால் உதிர்த்தாள்......

அந்தப் பெண்ணின் மனநிலை மிகவும் இக்கட்டான கணங்களில் ஒன்றாக அக்கணத்தை கடந்தது.... அவள் எதையும் செய்யவில்லை.... அவளுடைய வாழ்க்கையை அவள் விரும்பியவாறு அமைத்துக் கொள்ளவே அவளது தகப்பனார் அனுமதித்திருந்தார். செல்ல மகளான அவளை எப்போதும் கண்கலங்க விடுவதில்லை என்பதில் அத் தகப்பன் அலிக கைதாகும் வரை வெற்றிபெற்றிருந்தார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஒரு அற்புதமான நேரத்தில் அலிக வை நண்பியொருவரின் திருமண பந்தத்தின் போது அவள் சந்தித்திருந்தாள்..... அந்த அற்புதமான நேரத்தில் ஏற்பட்ட உணர்வுகளே அவனைத் திருமணச் செய்ய அவளைத் தூண்டியதுடன்..... அவன் மீது அளவற்ற அன்பைக் கொண்டிருக்கும் வண்ணம் அவள் வாழ்வை உருவாக்கியும் விட்டிருந்தது.

அந்த அளவற்ற அன்பின் பால் அவன் தொடர்பாக எந்த மறுப்பையும் அவள் சொல்லியதில்லை. அதனை அவள் தனது அன்பின் பலமாகவே எண்ணியிருந்தாள்..... அதனை அவளது பலவீனமாக எண்ணியது அலிக வின் மனம்......

இன்று அவள் பல இக்கட்டாண கணங்களைத் தாண்டிச் செல்லவேண்டிய நிலைக்கு அவளின் பலமும் அவனின் பலவீனமும் இடமளித்திருந்தன....

அவன் கைது செய்யப்பட்ட போது கூட அவள் அவன் மீது எள்ளளவேனும் சந்தேகம் அற்றிருந்தாள்.... ஆனால் என்று அவ்னது மடிக்கணணியின் கடவுச்சொல்லை அவள் தற்செயலாக அறிந்துகோள்ள முடிந்ததோ அன்றிலிருந்து அவள் அவன் மீது கொண்டிருந்த பிரேமைக் கனவுகள் அர்த்தமற்றுப் போயிருந்தன...

ஏனெனில் அவளுக்குத் தெரியும்...அந்தக் கணணியிலிருக்கும் படங்களும் சில தொடர்பாடல்களும் அவனைக் குற்றவாளியாக்கப் போதுமானவை என்பது.....

எனினும் அவள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அக்கணணியில் இருக்கும் எவற்றையும் அழிக்கவோ அல்லது அக் கணணியின் கடவுச்சொல்லை மாற்றவோ முயற்சிக்கவில்லை.... அவ்வாறு ஏதேனும் செய்து அது காவல்துறைக்குத் தெரியவருமாயின் தானும் அக்குற்றச்சாட்டில் கைதாக நேரலாம் என்பதுடன் அவ்வாறு கைதானால் தனது குழந்தை யாருமின்றிப் போய்விடலாம் ஏன்பதை அவள்.........

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல்

# "இறைவனும் நம்பிக்கையும்"



(வி.என்.சந்திரகாந்தி)

மக்கள் தமது முயற்சிகளுக்கெல்லாம் அப்பால், இறைவன் மீது நம்பிக்கை வைத்து அவனை இறைஞ்சுவதன் வாயிலாக தமது அபிலாசைகளை பூர்த்தி செய்ய முற்படுவது அவர்களது இயல்பு. அதன் பொருட்டு இறைவனை தமது கைக்குள் போட்டுக் கொள்வதற்காக அவர்கள் பல கைங்கரியங்களை கையாள்வர்.

சிலருக்கு கடவுள் மேல் நம்பிக்கை இருக்காது. ஆனாலும் ஒரு நப்பாசை காரணமாக "கடவுளே.நீ இருப்பது உண்மையானால் எனது விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றுவாயாக" என்று வேண்டிக்கொள்வர்.

இறைவன் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு வழிகாட்டும் மத ஸ்தாபனங்கள் இருக்கின்றன.

மக்களை மிகவும் கவர்ந்த மத ஸ்தாபனங்களாக, பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா (அருள்), ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் (வாழும் கலை), குருமகராஜி. (ஆறு திறவு கோல்கள்), பிரம்ம குமாரிகள் (தியானம்), சுவாமி சின்மயானந்தா (உபதேசம்) ஆகியோரால் தாபிக்கப்பட்ட பீடங்கள் விளங்குகின்றன.

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இந்த மதஸ்தாபனங்கள் இறைவனை அடையும் வழி பற்றி சுட்டிக்காட்ட தவறவில்லை.

பல நூற்றுக்கணக்கான மக்கள் இந்த ஸ்தாபனங்களில் "ஞானத்தின் தேடலுக்கான" அடிப்படை பயிற்சிகளை பெற்றுக்கிறார்கள். இறைவனை காணமுடியாது, உணரவேண்டும். அதற்குரிய மேலான வழி தியானமே என்பதை மத ஸ்தாபனங்கள் நன்கு புகட்டியுள்ளன.

அசையும் எதற்கும் பின்பாகவும் அசையாப்பொருள் ஒன்று நிச்சயம் இருக்கும். வாகனங்கள் அசைகின்றன. வீதி அசையாப்பொருள். நட்சத்திரங்களும், கோள்களும் விண்ணில் உலாவருகின்றன. அண்டவெளி அசையாப்பொருள்.

அது போன்று எமது மனம், சித்தம், புத்தி, அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கும் அசைவன. அவற்றை எம்மால் உணரமுடியும். ஆழ்மனதுக்கும் அப்பால் அசையாத, எம்மால் உணர்ந்து கொள்ள முடியாத ஒரு சக்திதான் எப்போதும் விழிப்புடன் இருந்து எமக்கு உயிர்ப்பை வழங்கு கின்றது. அந்த சக்தியே மெய்ப்பொருள்! அதை அடையும் வழியே தியானம்!

இந்த வாழ்க்கைப்பெருங்கடலில் பலவாறு மோதுண்டும் கூட எனது நண்பர்கள் சிலருக்கு இறைவன் மேல் நம்பிக்கை ஏற்பட்டதில்லை. அவர்கள் நல்ல பொருளாதார நிலையில் இருந்ததால் அவர்கள் இறைவனைப்பற்றி சிந்திப்பதும் இல்லை.

அது பற்றி அவர்களுக்கு கவலை இல்லாவிட்டாலும் கூட எனக்கு அவர்களின் நிலை துன்பத்தை அளித்தது. எப்படியும் அவர்களுக்கு இறைவன் பற்றிய உண்மையை அடையாளம் காட்ட வேண்டும் என்ற விருப்பம் என்னுள் ஒரு சமயம் முகிழ்த்தது.

ஒரு தினம் அவர்களை தச்சுத் தொழிலாளியின் பட்டறைக்கு அழைத்துச் சென்றேன். மரத்தினால் செதுக்கப்பட்ட பற்பல சிற்பங்களையும் அலங்காரப் பொருட்களையும் அவன் எமக்கு காட்டினான். நாம் மகிழ்ச்சி அடைந்தோம். அவனது முகத்திலும் எல்லையற்ற மகிழ்ச்சி பிரவாகித்தது.

அதே போன்றே அடுத்தடுத்த தினங்கள் அவர்களை ஓவியனிடமும் சிற்பியிடமும் கட்டடக்கலைஞனிடமும் சங்கீத வித்வானிடமும் அழைத்துச் சென்றேன்- அவர்களுடைய படைப்புக்கள் நண்பர்களுக்கு பெரும் ஆனந்தத்தை கொடுத்தது. அதைக்கண்டு அந்த கலைஞர்களும் பேரானந்தம் அடைந்தார்கள்!

இப்போது நான் நண்பர்களுக்கு கூறினேன் "இந்த உலகமே சிருஸ்டிப்பினாலேயே மேன்மை பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்குப் பின்னணியில் நிற்கும் சக்தியே இறைவன்! நாம் ஒவ்வொருவரும் இறைவனின் அம்சமே". நீங்கள் கண்ட படைப்பாளுக்குப் பின்னணியில் உள்ளவர்கள் கலைஞர்களாக இருப்பது போல இந்த பிரபஞ்சத்துக்குப் பின்னணியில் இருந்து கொண்டு இறைவன் தனது சிருஸ்டிப்பால் மகிழ்ச்சி அடைகின்றான்.

நீங்கள் கூட ஒரு கவிதையையோ சிறுகதையையோ யாத்து பத்திரிகைக்கு அனுப்பி பாருங்கள். அது பிரசுரமாகும் போது நீங்கள் உணரும் பேரானந்தத்தை உணருங்கள். ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் முகம் என்றால் மறுபக்கம் தலைதானே.......! சிருஸ்டிப்பின் சுகத்தை உணருங்கள். இறைவனை அனுபூதி நிலையில் கண்டு கொள்ளுங்கள்! நண்பர்கள் அனைவருமே பேரானந்தத்தில் மூழ்கினர்!

- நன்றி -

## செய்தித் துளிகள்

### பாலையூற்று புனித லூர்து அன்னையின் திருநாள் கொடியேற்றம்

திருகோணமலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வணக்க ஸ்தலங்களில் பாலையூற்று புனித லூர்து அன்னையின் ஆலயமும் ஒன்று.இம்முறை அன்னையின் வருடாந்த திருநாள் எதிர்வரும் ஞாயிறு 25 ம் திகதி மிக கோலாகலமாக கொண்டாடப்படவிருக்கின்றது. திருநாளின் அடையாளமாக 16 வெள்ளிக்கிழமை அன்னையின் திருவுருவம் பதித்த திருநாள் கொடி சம்பிரதாய பூர்வமாக ஏற்றிவைக்கப்பட்டது.

(மரியதாஸ்)



### திருகோணமலைத் தமிழ்விழா

திருகோணமலை தமிழ் விழா உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது கலை இலக்கிய நிகழ்வுகள் பலவும் அரங்கேற்றப்பட்டன. கிழக்கு மகாண கல்விப்பணிப்பாளர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டுசிறப்பித்தார். மூத்த எழுத்தாளர், நந்தினிசேவியர், கௌரிபாலன், கிண்ணியா நியாஸ் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர். சக்தி கலாலயா மாணவிகளின் பல்வேறு நடன நிகழ்வுகள் பலரையும் கவர்ந்தன. வில்லுப்பாட்டு மற்றும் இசைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இங்கு மூத்த கலைஞர்களான வில்லுப்பாட்டு வீரசிங்கம் என அழைக்கப்படும் கலாபூசனம் கா.வீரசிங்கம், கலாபூசனம் செ.விபுணசேகரம். காந்திப்பெரியார் இறைபணிச்செம்மல் பொ.கந்தையா. அண்ணாவியார் அ.சித்திரவேலாயுதம் ஆகியோர் நினைவச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 16 | 17 | ■ | 18 | 2 | | 19 |
| | ■ | 3 | | | 20 | | ■ | 21 |
| | 4 | ம் | | ■ | 5 | | | |
| | | | 22 | ■ | 6 | | 23 | |
| 7 | | | | 8 | | | | |
| ■ | | | 9 து | | | 10 | | |
| 24 டை | ■ | | | | ■ | 11 இ | | ■ |
| | | ■ | 12 | | | 13 | | ம் |
| 14 | | | | 15 | | | | ■ |

## மேலிருந்து கீழாக

1. நீண்ட நாள் சிறையிருந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுள் ஒருவர்
2. தடிமன் வந்தால் இது இருக்கும்
4. பாம்பின் ஒத்த சொல்
8. காதில் அணிவது
16. தமிழர்களின் கோல் சுற்றும் கலை
17. காளியின் சக்தியை பாரதி இச்சொல்லால் குறிப்பார்
18. பீஸ்மரைக் கொல்ல அருச்சுனன் முன்நிறுத்திய அலி
19. மாவின் பிஞ்சு -கீழிருந்து மேலாக
20. "நுவர" என்ற சிங்கள சொல்லைக் கொண்ட நகரத்தின் தமிழ்ப்பெயர்
21. பலநிறங்களைக் கொண்டவன் - குழம்பியுள்ளது
22. தயிரில் விட்டு உண்ணும் இலங்கையின் பிரசித்தமான பாணி
23. இந்திய வரலாற்றுப் புனைகதை வரைஞர்
24. இரத்தம் குடிக்கும் - கீழிருந்து மேலாக

# குறுக்கெழுத்து புதிர் 009

**போட்டி முடிவுத் திகதி : 22.05.2014**

## இடமிருந்து வலமாக

1. இந்த நாட்டின் விமானத்தை இப்போது வரை காணவில்லை
2. பணத்தைக் குறிக்கும் இந்தியத் தமிழ்ச் சொல்
3. தெளிவின் ஒத்த சொல் - குழம்பியுள்ளது
4. இவர்களின் நாளைத்தான் கடந்தவாரம் கொண்டாடினோம்
5. பிரபல்யமான முருகணாலயம் உள்ள கிழக்குப் பிரதேசம் - குழம்பியுள்ளது
6. இலங்கையின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஒருவர்
7. பணத்தைக் கொண்டு செய்யும் தொழில் - குழம்பியுள்ளது
8. சிலை செய்யப் பயன்படும்
9. படகோட்டிக்குத் தேவை
10. குழந்தைகள் பால் குடிக்கப்பயன்படும் குடுவை - குழம்பியுள்ளது
11. இராமனுக்கு இதுவும் ஒன்று தான்
12. யானை ஓட்டுபவன்
13. உலகத்தின் ஒத்தசொல்
14. ஆணும் பெண்ணுமாய் இருப்போர்
15. பாரதப் போரின் கடவுள் - குழம்பியுள்ளது

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159ஏ.
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

### குறுக்கெழுத்து புதிர் 008 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | ர | 17 வு | ■ | 2 வ | ண | க் | க | 18 ம் |
| ர | ■ | 3 ர | 19 சி | ஞ் | கோ | ப் | பை | ம |
| லா | த் | 4 த | வ | 5 சி | 20 கா | ■ | ■ | ண் |
| று | ■ | த் | ன | ன | னா | லா | ல் | 6 தி |
| 7 க | 8 ண் | உ | டி | 9 ம் | பா | பு | ம் | ட |
| 10 தி | 21 க | ம் | 11 யா | ழ் | ப் | பா | ண | ம் |
| ர | 12 பா | 22 ல | 13 ர் | டா | ட் | 14 க | து | 23 வி |
| வெ | ல | த் | ■ | 15 கா | டு | ம் | ■ | ட |
| ளி | ம் | தி | ■ | து | ■ | 16 பு | ல | ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.

1. அறம் என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று தருக. ..................................
2. தொண்டுகளில் பெரியது எனக் கவிஞர் கருதுவது எதனை? ..................................
3. உள்ளம் கசிதல் என்பதன் பொருள் யாது?............................
4. நாம் நினைத்தோம் என்பதை ஒருமையில் மாற்றி எழுதுக. ............................
5. தந்தை, தாயைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக. ..............................
6. பசுவின் இளமைப் பெயர் யாது?
7. இப்பாடலில் இடம்பெறும் முன்னிலை, பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.
8. இங்கு இடம்பெறும் உயர்திணை, பெண்பாற் பெயர்ச் சொல் யாது? .................
9. கவிஞர் கன்றை யாருக்கு ஒப்பிடுகின்றார்? ..............................
10. பருவம் பார்த்துப் பயிர் செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி ஒன்றை தருக.

02. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லை தெரிக.

1. சூழ்ந்து, சூல்ந்து, சூள்ந்து
2. பின்னாக்கு, பிண்ணாக்கு, பிண்னாக்கு
3. காய்ச்சல், காச்சல், காய்சல்
4. மழர்கள், மலர்கள், மளர்கள்
5. நல்ளொழுக்கம், நல்லொழுக்கம், நள்ளொழுக்கம்

03. பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. காட்டில் வாழ்வது புலி, கறிக்கு சேர்வது ...............................
2. கடலில் வீசுவது திரை, பகையரசருக்குக் கொடுக்கும் காணிக்கை ..............................
3. கடமையின் மறு பெயர் பணி, காலையில் பெய்வது .........................
4. வீட்டில் வளர்ப்பது மரம், வீரத்தின் மறு பெயர் ...............................
5. நோவின் மறுபெயர் வலி, நாம் சுவாசிப்பது ...........................

04. மாலை 3 மணியளவில் நான் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு திரும்பி வந்த போது, எனது நிழல் என்னைப் பின்தொடர்ந்து வந்தது எனில், நான் எத்திசையை நோக்கி செல்கின்றேன்?
1. கிழக்கு 2. மேற்கு 3. தெற்கு

05. தாயார் ஒருவர் தன்னிடத்தில் இருந்த பணத்தில் அரை பங்கை புத்தகங்கள் வாங்க செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து, அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபா 50 எனின், அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் யாது?
1. ரூபா 50 2. ரூபா 100 3. ரூபா 200

06. ஒரு பூந்தோட்டத்தில் ரோசா, மல்லிகை, லில்லி, சாமந்தி எனும் பூஞ்செடிகள் ஒழுங்கு முறைப்படி மாறிமாறி நடப்பட்டுள்ளன. இதில் 31 வது பூஞ்செடியின் பெயர் என்ன?
1. மல்லிகை 2. சாமந்தி 3. லில்லி

07. அழகான கூடுகளை அமைக்கும் பிராணி எது?
1. சிலந்தி 2. தையல் குரு வி 3. தூக்கணம் குரு வி 4. கிளி

08. சிங்கள, தமிழ் புத்தாண்டுக் காலம் நெருங்கிவருவதை முன்னறிவிக்கும் பிராணி எது?
1. காகம் 2. ஆட்காட்டி குரவி 3. குயில் 4. மலைக்காகம்

09. மிகத் தூரத்தில் உள்ள இரையைக் கண்டு அதனைப் பிடிக்கும் ஆற்றல் கூடுதலாக உள்ள பறவை எது?
1. கொக்கு 2. தேன் குரு வி 3. கழுகு 4. மழைக்குரு வி

10. கொழுக்கட்டை தயாரிக்கும் போது பயன்படுத்தும் வித்து?
1. கௌபி 2. பாசிப்பயறு 3. ஆசணிப்பலா 4. பலாக்கொட்டை



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## நன்றி மறப்பது நன்றன்று

ஒரு வயதான மீனவன், முதுமையால் வலுவிழந்த அவனால் கடலுக்குள் போய் மீன் பிடிக்க முடியவில்லை. அவன் அப்படி வெய்யிலில் காய்ந்து கொண்டிருந்த போது அங்கு ஒரு அழகான பெரிய பறவை வந்தது. அது வெள்ளிச் சிறகுகளாலான இறக்கையைக் கொண்டிருந்தது. அதுதான் தேவலோகப் பறவையான காஹா.

காஹா தாத்தாவைப் பார்த்து "ஏன் தாத்தா இந்த வெயிலில் காய்கிறாய். உனக்கு உதவ உன் வீட்டில் யாருமே இல்லையா?" என்று கேட்டது." ஒரு ஆத்மா கூட இல்லை" என்றான் மீனவன்.

"நான் இனி தினமும் உனக்கு ஒரு மீன் கொண்டு வந்து தருகிறேன். அதைக் கொண்டு பிழைத்துக் கொள்" என்று கனிவுடன் கூறி விட்டு பறந்து விட்டது.

அ ன்றிலிருந்து தவறாமல் காஹா ஒரு பெரிய மீனை தாத்தாவின் வீட்டில் போட்டு விட்டு போய்விடும். அந்த மீனுக்குச் சந்தையில் மிகுந்த கிராக்கி இருந்ததால் மீனவன் அதை அதிக விலைக்கு விற்றுப் பணம் சேர்க்க ஆரம்பித்தான். வசதியாக வாழத் தொடங்கினான்.

ஒரு நாள் தண்டோரா போட்டார்கள். காஹா என்ற ஒரு பறவை அந்த இடத்தில் சுற்றித் திரிவதாக அறிவதாகவும், பறவையைப் பற்றித் தகவல் தெரிவிப்பவர்களுக்கு கருவூலத்திலிருக்கும் பாதித் தங்கம் தர அரசர் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள்.

"அரசனுக்கு காஹா ஏன் தேவை?" மீனவன் தண்டோராவிடம் கேட்டான்." அவர் காஹாவின் ரத்ததில் குளித்தால் அவருக்குக் கண் பார்வை திரும்பக் கிடைக்கும்" என்று கூறிய தண்டோரா. சட் டென்று "உனக்கு காஹாவைப் பற்றி தெரிந்திருக்கும் போலிருக்கிறதே?" என்று கேட்டான்.



" அது.. வந்து.. இல்லையில்லை.. எனக்குத் தெரியவே தெரியாது" என்று உளறினான். தண்டோராவுடன் வந்த காவலர்களுக்கு சந்தேகம் வந்ததால் மீனவனைப் பிடித்துச் சென்று அரசன் முன்னால் நிறுத்தி விட்டார்கள். பயந்து போன மீனவன், "காஹா பெரிய பறவை. அதை என் ஒருவனால் பிடிக்க முடியாது" என்று கூறினான். அரசன் பத்துக் காவலர்களை மீனவனுடன் அனுப்பினான். அன்று வழக்கம் போல காஹா வந்தது. மீனவன் "காஹா! உனக்கு நான் நன்றி சொன்னதே இல்லை. கொஞ்சம் உள்ளே வந்து விட்டுப் போயேன்" என்று கூறினான். காஹாவும் அவனை நம்பி உள்ளே வந்தது. ஓடிப் போய் அதன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட மீனவன், ஒளிந்து கொண்டிருந்த காவலர்களைக் கூப்பிட்டான்.

அவர்கள் வருவதற்குள் சுதாரித்துக் கொண்ட காஹா மீனவனுடன் பறந்து உயர எழுந்து விட்டது. விழுந்தால் சிதறி விடுவோம் என்று பயந்த மீனவனால் கையை எடுக்க முடியவில்லை.

**நன்றி மறப்போர்க்கு மன்னிப்பில்லை!!!!**

## வரவை!

வெயிலே வெயிலேவீழாதே,
வெப்பத்தால் எமை ஆளாதே!
தயிரோ மோரோ இவையேனும்
தண்ணீர் கூடக் கிடையாதே!

மழையை வரவை இடையே நீ,
மரஞ்செடி கொடியை வளரச்செய்!
பிழை செய்யாமல் சரி செய்வாய்,
பேரும் புகழும் பெற்றிடுவாய்!

முகிலால் வெயிலே நிழல் போல,
முடிவில் முகிலை நீராக்கு!
அகிலம் மழையை நம்பச்செய்,
அழகாய்ப் பயிரை விளையச்செய்!

பட்டினி இன்றிப் பசி தீர்ப்பாய்,
பழம்காய் கறிகள் பரப்பிப்பாய்1
கொட்டும் மழையைக் கூட்டாதே,
குளிர் வரும் போது வெயிலே வா!

— தாமரைத் தீவான் —
ஈச்சந்தீவு — கிண்ணியா

## சிறுவர் முரசு



### சிந்திக்க .. ..

வெற்றிக்கு போராடும் போது 'வீண் முயற்சி' என்பார்கள்
வெற்றி அடைந்து விட்டாலோ 'விடா முயற்சி' என்பார்கள்.

## திறமையுள்ள குழந்தைகள்



குழந்தைகளிடம் இருக்கும் திறமையை எப்படி கண்டு பிடிப்பது?

சில குழந்தைகள் கையில் பேனா, குச்சி போன்ற ஏதாவது ஒரு எழுதுபொருள் கிடைத்துவிட்டால் சிலேட்டிலோ அல்லது தாளிலோ கிறுக்கிக் கொண்டே இருப்பார்கள். இந்த குழந்தைகளுக்கு ஓவியம் வரைவதில் ஆர்வம் இருக்கிறது என்பதை அவர்களது பெற்றோர்கள் தெரிந்து கொண்டு அந்த துறையில் அவர்களை ஊக்கப்படுத்தலாம். கிறுக்கிக் கிறுக்கி வரையும் போது ஓவியத்திறமை வெளிப்படும். இதைத்தான் "சித்திரமும் கைப்பழக்கம்" என்று கூறுவர்.

அதேபோல் சிலருக்கு பாடுவதில் மிகவும் ஆர்வம் இருக்கும். அவர்களுக்கு பிடித்த பாடல் எங்கேயாவது கேட்டுவிட்டால், அதே ராகத்துடனே இவர்களும் சேர்ந்து பாட ஆரம்பித்து விடுவர்.

மிமிக்ரி, நடனம், நடிப்பு, இசை, தையல், விளையாட்டு, பேச்சுக்கலை, விண்வெளி ஆராய்ச்சி, போன்ற துறைகளில் ஆராய்ச்சி, சமூக சேவை என்று அவர்களுக்கு எந்தெந்த துறையில் ஆர்வம் உள்ளது என்பதை அவர்களது செயல்பாடுகளை வைத்தே கண்டுபிடித்து விடலாம்.

உங்கள் குழந்தைகளின் ஆர்வம் எந்த துறையில் உள்ளது என்பது பற்றி நீங்களே உணர்ந்தாலும்கூட, குழந்தைக்கு அதில் மிகுந்த ஆர்வம் உள்ளதா என்று அவர்களிடமே கேட்டு அதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

தொடரும்.. ..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. பொருள் ஒன்றை விற்கும் போது, அதன் குறித்த விலையில் 8 வீதம் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. அப் பொருளின் குறித்த விலை ரூபா 2500 எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.

2. ஒழுங்கான குவிவுப் பல்கோணி ஒன்றின் அகக் கோணம் ஒன்றின் பெறுமானம் 135 பாகை ஆகும்.

1. பக்கங்கள் ஒரே பக்கத்திற்கு நீட்டுவதன் மூலம் உண்டாகும் புறக் கோணம் ஒன்றின் பெறுமானம் யாது?

2. இப் பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

3. ஒரு தொர்மாடி வீட்டில் ஒவ்வொரு தட்டிலும் 4 வீடுகள் வீதம் 5 தட்டுக்கள் உள்ளன. அத்தொடர் மாடியில் நீள, அகல, உயரங்கள் முறையே 6மீ, 5மீ, 2மீ அளவுகள் கொண்ட ஒரு கனவுரு வடிவ நீர்த் தொட்டி உள்ளது.

1. தொட்டியின் கொள்ளளவை கனமீற்றரில் தருக.

2. ஒவ்வொரு நாளும் இத்தொட்டி நிறைய நீர் நிரப்பப்படுகின்றது. ஒரு நாளைக்கு ஒரு வீட்டிற்கு 1500லீற்றர் நீர் சராசரியாக தேவைப்படுகின்றது எனின், 1 நாளைக்குத் தேவையான முழுநீரின் அளவை லீற்றரில் தருக.

3. இத்தொட்டியை நிரப்பும் நீர்க் குழாயானது 1 நிமிடத்தில் 500 லீற்றர் என்ற வீதத்தில் நீரை விட்டுக் கொண்டிருந்தால் வெறுமையாக இருக்கும் போது தொட்டியை நிரப்ப எடுக்கும் நேரத்தை மணியில் தருக.

4. ஒரு மைய வட்டங்கள் இரண்டின் ஆரைகள் 5செ.மீ, 13செ.மீ ஆகும். சிறிய வட்டத்தைத் தொடுமாறு பெரிய வட்டத்தினுள்ளே வரையத்தக்க நாணின் நீளம் யாது?

5. ஒருவர் தமது காணியில் அரைவாசியை மனைவிக்கும் மீதியைச் சமமாக மூன்று பிள்ளைக்கும் பிரித்துக் கொடுப்பதற்கு உத்தேசித்தார். எனினும், அவர் அவசர தேவைக்காக காணியில் கால் பங்கை விற்க வேண்டியிருந்தது. பின்னர் மீதிக் காணியை முதலில் உத்தேசித்தது போல் பிரித்துக் கொடுத்தார்.

1. காணியில் கால் பங்கை விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் அளவு மொத்தக் காணியில் என்ன பின்னமாகும்?

2. மொத்தக் காணியில் என்ன பங்கு மனைவிக்குக் கிடைத்தது?

3. மொத்தக் காணியில் என்ன பங்கு ஒரு பிள்ளைக்கு கிடைத்தது?

4. காணியில் ஒரு பங்கை விற்கு முன்பாக ஒரு பிள்ளைக்கு வழங்குவதற்குக் குறிப்பிட்ட காணியின் அளவிற்கும், பின்னர் கிடைத்த காணியின் அளவிற்கும் இடையே உள்ள வித்தியாசம் 12 ஹெக்ரேயர் எனின், மொத்தக் காணியின்

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர்**

MATHS
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. மனிதனின் உடலில் மூன்று வகைப் பிரதான தசைகளாகிய வன்கூட்டுத்தசை, மழமழப்பான தசை, இதயத் தசை என்பன பற்றிய சரியான கூற்று யாது?
   1. இதயத் தசையும் வன்கூட்டுத் தசையும் வரி கொண்டவை.
   2. இதயத் தசையும் மழமழப்பான தசையும் வரி கொண்டவை.
   3. வன் கூட்டுத் தசையும் மழமழப்பான தசையும் வரி கொண்டவை.
   4. வன் கூட்டுத் தசை மாத்திரம் வரி கொண்டது.

2. நிறக் குருட்டினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு
   1. தூரத்தில் உள்ள பொருட்கள் மாத்திரம் தெளிவாகத் தெரியும்.
   2. கிட்ட உள்ள பொருட்கள் மாத்திரம் தெளிவாகத் தெரியும்.
   3. மங்கலான ஒளியில் நிறங்களை வேறு பிரித்து இனங்காண இயலாது.
   4. சிவப்பு, பச்சை நிறங்களை வேறு பிரித்து இனங்காண இயலாது.

3. ஒரு மின்கலனடுப்பில் வெப்பச்சுருளினது தடை 62.5 ளகாகும். இவ்வடுப்பு 250 வோல்ற்று மின்வழங்களுடன் 3 நிமிட நேரத்திற்கு தொடுக்கப்பட்டது. அதிலிருந்து விடுவிக்கப்படும் வெப்பத்தின் அளவைக் காண்க.
   1. 720,000 2. 180,000 3. 12,150 4. 30,000

4. குரைத்துப் பாயும் நாயைக் கண்ட ஒருவர் விரைவாக ஓடத் தொடங்குனிறார். அவருடைய உடலில் சுரக்கப்படும் இச்செயலுடன் தொடர்புபட்ட ஓமோன்
   1. வளர்ச்சி ஓமோன் 2. தைரொட்சின் ஓமொன்
   3. ஈஸ்ரஜன் ஓமொன் 4. அதிரீனலின் ஓமொன்

5. ஒரே வெப்பநிலையில் இருக்கும் சம நீர்க் கனவளவுகளுடன் கறியுப்புக் கட்டிகளையும் உப்புத் தூளையும் தனித்தனியாகச் சேர்த்துக் கரைக்கப்பட்டது. கரைசல் சோடி நிரம்பிய நிலைமையை அடையும் போது கரைந்த உப்புத் திணிவுகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிந்தெடுக்க.
   1. கரைந்த திணிவுகள் சமமாகும்.
   2. கரைந்த உப்புத் தூளின் திணிவு உப்புக் கட்டியின் திணிவிலும் பார்க்கக் கூடியது.
   3. கரைந்த உப்புக் கட்டியின் திணிவு உப்புத் தூளின் திணிவிலும் பார்க்கக் கூடியது.
   4. கரையும் விதத்திற்கேற்ப கரையும் திணிவும் மாறும்.

6. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாகக் கருதப்படுவன.
   1. சிவப்பு, மஞ்சள், பச்சை
   2. சிவப்பு, பச்சை, நீலம்
   3. சிவப்பு, மஞ்சள், நீலம்
   4. நீலம், பச்சை, மஞ்சள்

7. பாதுகாப்பிற்காக வீட்டு மின்சுற்றில் பயன்படுத்தப்படாத துணையுறுப்பு
   1. உருகி 2. பிரதான ஆளி 3. மின் மானி 4. இடறு ஆளி

8. இலங்கையில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பற்றீரியா இனம் ஒன்றைப் பயன்படுத்தல் பற்றி சுகாதார அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தது. இக்கட்டுப்பாட்டு முறைக்கு உதாரணம்
   1. இரசாயனக் கட்டுப்பாடு 2. பௌதீகக் கட்டுப்பாடு
   3. உயிரியல் கட்டுப்பாடு 4. படுகொலை

9. இயக்கு நரம்புக்கலங்களில் உட்காவு நரம்பு முனைகள் இருப்பது.
   1. விளைவு காட்டும் அங்கங்களில் 2. புலன் அங்கங்களில்
   3. மைய நரம்புத் தொகுதியில் 4. முண்ணாண் நரம்புகளில்

## பாடம் : வரலாறு

(01) கல்வெட்டுக்களில் "கெதுவ, அருப்" என்ற பதங்களால் குறிப்பிடப்படும் பயிர்ச் செய்கை
1 .சேனைப்பயிர் 2. வீட்டுத்தோட்டம்
3. நெற்செய்கை 4. தானியச்செய்கை

(02) ஒலுவடு என மகாவம்ச நூலில் குறிப்பிடப்படும் தொழில்
1. ஆடைத் தொழில் 2. நெசவு 3. ஓடு,செங்கல் உற்பத்தி
4. ஆபரணம்

(03) 'அந்தராப்பன' என்ற பெயரில் சந்தை காணப்பட்ட இடம்
1. அநுராதகம . 2. விஜிதகம 3. உபதிஸ்ஸகம 4. உருவெலகம

(04) தபசு,பல்லுக என்ற வியாபாரிகளால் கட்டப்பட்ட விகாரை
1 .தூபராம 2. ஹிரிகடுசாய 3. அபயகிரி4 .வெல்கம் விகாரை

(05) இலங்கையில் மிகப் பெரிய தூபி
1. ஜேத்தவனாராமய 2. மகாவிகாரை 3. தூபராம 4. அபயகிரி

(06) பண்டைய நீர்பாசன அமைப்பில் குளத்தின் பகுதியான கலிங்கல் தொட்டியால் ஆற்றப்பட்ட பணி
1. மேலதிக நீரை வெளியேற்றுதல்
2. குளக்கட்டை நீரரிப்பிலிருந்து பாதுகாப்பது
3. குளத்தில் சேரும் அடையல்,உக்கல்களை தடுத்தல்
4. கலிங்கலின் ஊடாக நீர் வெளியேறும் போது குளக்கட்டிற்கு ஏற்படும் அமுக்கத்தை குறைப்பது

(07) மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப்பட்ட மன்னன்
1. மகாசேனன் 2. தாதுசேனன் 3. பண்டுகாபயன் 4. வசபன்

(08) அவுக்கண புத்த சிலை காணப்படும் இடம்
1. கலாவாவி அருகில் 2. குட்டம் பொய்கை அருகில்
3. கல் விகாரையில் 4. புதுருவகல

(09) அ. கலிகால சாகித்ய சரிவஞ்சு பண்டிதன் என பெயர் பெறல்
ஆ. கலிங்கமாகனை விரட்டி அடித்தல்
இ. கவிசிலுமின விசுத்தி மார்க்க சன்னய இலக்கியம் படைத்தல்
மேற்படி தகவலுடன் தொடர்புடைய அரசன்
1. 3ம் விஜயபாகு 2. 2ம் பராக்கிரமபாகு
3. 4ம் பராக்கிரமபாகு 4. 2ம் புவனேகபாகு

(10) குருணாகலில் அத்துக்கல்புரவை தலைநகராக்கியவன்
1. 1ம் புவனேகபாகு 2. 2ம் புவனேகபாகு 3. 3ம் புவனேகபாகு
4. 4ம் புவனேகபாகு

**ஆசிரியர் : அகிலன்**



கடந்த வருடம் HISTORY ACADEMY யில் கல்வி கற்ற 77 மாணவர்களில் 58 மாணவர்கள் A பெறுபேற்றையும், 16 மாணவர்கள் B பெறுபேற்றையும், 03 மாணவர்கள் C பெறுபேற்றையும் பெற்றுத்தந்து எனது கல்வி நிலையத்துக்கு பெருமை சேர்த்தமைக்கு இம் மாணவச் செல்வங்களுக்கு எனது நன்றிகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரபட்சமான விலை...

என்றும் தெரிவித்தார்.

தமிழ் மீனவர் ஒருவர் கருத்தைத் தெரிவிக்கையில் தமக்கும் அதே நிலை நிலவுவதாகவும் பிரதான வியாபாரியிடம் கடன் பட்டால் என்ன கடன் படாவிட்டால் என்ன திருகோணமலைச் சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலை மிகக் குறைவாக இருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் சிங்கள மீனவர்கள் கொஞ்சமேனும் விலையை அதிகரிக்கப் போராடுவார்கள் எனத் தெரிவித்த அவர் அந்த வாய்ப்பு தமிழ் மீனவர்களுக்கு கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தார்.

அதேநேரம் புதிய சந்தையில் தங்களுக்கோ தமிழ் வியாபாரிகளுக்கோ பலகை தரப்படவில்லை என முஸ்லிம் மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

புதிய மீன்சந்தைக் கட்டிடம் திறக்கப்படும் போது மீன்களின் வகைகளுக்கு ஏற்ப நிரந்தர விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் அதனை யாரும் பின்பற்றப்படவில்லை எனத் தெரிகின்றது.

புதிய வியாபாரிகள் விலையைக் கூறி மீன்களை வாங்க முடியுமா? எனக் கேட்டபோது புதிய மீன் வியாபாரிகளை ஏற்கனவே பலகை வழங்கப்பட்டவர்கள் வருவதற்கு அனுமதிப்பதில்லை என்றும் அவ்வாறு தப்பித்தவறி யாருக்கேனும் விற்றுவிட்டால் அன்றிலிருந்து அந்த மீனவரைப் புறக்கணிக்கும் நடவடிக்கையில் பலகை வியாபாரிகள் ஈடுபடுவர் என்றும் மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

## பட்டினிச்சாவை எதிர்கொள்ளும்..

அடுத்து முதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிறீ. பாஸ்கரன் குருக்கள் அங்கு உடினடியாகச் சென்று நிலைமைகளை மலைமுரசிற்குத் தெரியப்படுத்தினார்.

சுகவீனம் அடைந்துள்ள முதியவர் சரியான மருத்துவக் கவனிப்போ, உணவோ, உடைகளோ இன்றி வெறும் நிலத்தில் படுக்க வைக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார். அத்துடன் அம் முதியவரின் இரண்டாவது மகள் கடும் மனநோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் 28 வயதான அப் பெண்ணின் நடவடிக்கைகள் கட்டுக்குள் அடங்காமல் இருப்பதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர். அவர்கள் இருவரையும் பராமரிக்க வேண்டிய தேவையிருப்பதால் வேலைகளுக்குச் செல்ல முடியாதுள்ள முப்பத்தியிரண்டு வயதான மூத்த மகளும் கடும் பட்டினியாலும் அவலத்தாலும் மன உளைச்சலடைந்திருப்பதாகவும் இந்துக் குருமார் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இதனையடுத்து மலைமுரசின் முயற்சியுடன், வைத்திய கலாநிதி திரு. ஜீவராஜ் மற்றும் ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன் முதல் ஒரு வாரத்திற்குத் தேவையான அரிசி, பருப்பு மா, சீனி, சோப் மற்றும் சில உடுதுணிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சில மாதங்களாக பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள இம் மக்களை பொறுப்புடையவர்கள் எவரும் கவனிக்கவில்லை என மக்கள் தெரிவித்தனர். மேன்கமம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் வீட்டிற்கு மிக அருகில் உள்ள இக்குடும்பத்தின் நிலையை அக்கிராமத்திற்குப் பொறுப்பான கிராமசேவை உத்தியோகத்தரும் அறிந்திருக்கவில்லை.

சமூகசேவைத் திணைக்களத்தால் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் மூவாயிரம் ரூபா உதவியைப் பெறத் தகதியுள்ள இம் முதியவருக்கு அது புறக்கணிக்கப்பட்டிருப்பதுடன் சாதாரண பிச்சைச் சம்பளமான இருநூற்றியைம்பது ரூபாயை மட்டும் இம்முதியவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியானதை அடுத்து அகம் நிறுவனத்தின் மகளிர் அணியினர் நிலைமைகளை அவதானித்துச் சென்றிருப்பதாக தெரிகின்றது.

மனநிலைப் பாதிப்பிற்குள்ளாகியுள்ள பெண்ணின் நிலையைக் கருத்திற்கொண்டு வைத்தியர்களின் ஆலோசனைப்படி அவரை மருத்துவசாலையில் சேர்ப்பதற்காக அவசர காவல்துறை இலக்கமான 119ற்கு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக இச் செய்தியை எழுதும் வரை காவல்துறை நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

மனிதாபிமான உதவிகளை நேரிடியாகவோ அன்றேல் மலைமுரசின் ஊடாகவோ மேற்கொள்ள முடியும்.



விளம்பரத்திற்கன்றி ஆவணப்படுத்தலுக்காக எடுக்கப்பட்ட புகைப்படம்

(மேலதிகப் படங்களையும் கடிதங்களையும் tbn.asia இணையத்தில் காணலாம்)

## சூங்கான்குழி...

தெரியப்படுத்திய போது அக்காணியை விடுத்து மற்றொரு காணியை மயானத்திற்காகப் பாவிக்குமாறும் அதற்குத் தான் அனுமதி தருவதாகவும் தெரிவித்திருக்கின்றாரே தவிர மற்றொரு காணியை இத் தேவைக்காக அவர் அடையாளம் காட்டவில்லை என்றும் தெரிவித்தார்.

அம் மயானத்தில் உடலத்தை புதைப்பதற்குத் தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து சுமார் 2.30 மணி நேரத்தாமதத்தின் பின்னரே அவ்வுடலம் புதைக்கப்பட்டதாகவும் இன்று (15) ம் திகதி மரணமடைந்த ஒருவரைத் தமது இடுகாட்டில் புதைப்பதற்கு காவல்துறை பாதுகாப்புடன் நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இறுதியாக 1986ம் ஆண்டில் சடலமொன்று அவ்விடுகாட்டில் புதைக்கப்பட்ட பின்னர் போரினால் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து திருப்பிய போதே இடுகாடு தனிக்காணியாக உரிமை கோரப்பட்டிருப்பது தெரியவந்ததாக கிராம சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

**(கிராமசபைத் தலைவரின் ஒலிப்பதிவை tbn.asia இணையத்தில் கேட்கலாம்)**

## சீன உயர்பாதுகாப்புக்குழு...

நாடுகளின் சுற்றுலாவில் இறுதியாக இலங்கை வந்துள்ளனர். கம்போடியா மற்றும் பங்களாதேஸ் ஆகிய நாடுகளில் பயணங்களை முடித்துக் கொண்டு இலங்கை வந்துள்ள இவர்கள் இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களுக்குச் சென்றிருந்தனர். கொழும்புத் துறைமுகம், கட்டுநாயக்க வான்படைத்தளம் கண்டி மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங் களுக்கே இவர்கள் வருகை தந்துள்ளனர்.

## அரசைக் கடிந்தாரா...??

நடைபெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். கடந்த கால யுத்த வடுக்கள் மறக்கப்படக் கூடியவை அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு யுத்த களத்தை எடுத்துக்கொண்டால், அங்கு ஆயிரம் சடலங்கள் கிடக்கும். இரண்டாயிரம் போராளிகள் காயப்பட்டிருப்பார்கள். பலர் அங்கவீனமாக்கப்பட்டிருப்பார்கள். இரத்த ஆறு ஓடும். இது போன்ற நிலைமைதான் அங்கு இடம்பெற்றன.

இவ்வாறு 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தையும் இழப்புக்களையும் நிறுத்தி, குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட இளைஞர், யுவதிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து இன்று ஒரு அபிவிருத்திப் பாதையில் எமது மாவட்டத்தை வழிநடத்தி சிறந்த அமைதியான காலத்திலேயே நாங்கள் தற்போது வாழ்ந்துவருகின்றோம் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

## தமிழ் முஸ்லிம் உறவை...

குற்றச்சாட்டுக்கள் வந்து கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம், புனர் வாழ்வுச் செயற்பாடுகள், காணி தொடர்பான விடயங்களில் பிழையான...

தகவல்களை உத்தியோகபூர்வமாக வழங்கி அவர்களுக்கான உரிமைகள் கிடைப்பதற்கு தமிழ் அதிகாரிகள் தடையேற்படுத்தி வருவதாக முஸ்லிம் மக்கள் மத்தியில் பரவலான கருத்துக்கள் உள்ளன.

கடந்த மாதம் நடைபெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவமும் இதற்கு வலுச்சேர்ப்பதாகவே உள்ளது. இவை ஆரோக்கியமான செயற்பாடுகளல்ல என்பதை இந்த அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மாணவர் ஒன்றியம்...

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி தொழிலாற்றுபவர்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் இவ்வமைப்பின் நோக்கம் உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிப் பல்கலைக்கழக புகுமுக நுண்ணறிவுத் தேர்வில் சித்தியடையத் தவறும் மாணவர்களின் நலனுக்காக வகுப்புக்களை நடாத்துவதே எனக் கலந்தாலோசிக்கப் பட்டுள்ளது.

நுண்ணறிவு மற்றும் உளசார்புப் படிப்பித்தலை விளைத்திறன் கொண்ட ஆசிரியர்களைக் கொண்டு கற்பித்தல் தொடர்பாக அக்கலந்துரையாடல் நடைபெற்று முடிந்துள்ளது.

## தொலைபேசிக் காதலால்...

கொங்கோடியா மேற்பிரிவு காட்டுப்பகுதியில் வண்டியை நிறுத்தி பெண்ணின் தாயை கட்டி வைத்து அப்பெண்ணை வல்லுறவுக்குட்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தலைமறைவாகியுள்ள சந்தேக நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சம்பூர் மகாவித்தியாலயம்...

திருகோணமலை மாவட்டத்தின் தொன்மையினைப் பறைசாற்றி நிற்கும் பழம்பெரும் கிராமம்,சம்பூர்க் கிராமமாகும். அக்கிராமத்தின் தொன்மையினைஒத்ததாகவே, தி/சம்பூர் மகாவித்தியாலயம் விளங்குகின்றது.

அப்பிரதேசமக்களின் கலாசாரப் பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தி/சம்பூர் மகாவித்தியாலயம் கல்வித்துறையிலும் சாதனைகள் பலபடைத்து, இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கல்விமான்களையும்,பழைய மாணவர்களையும் கொண்ட விருட்சமாக விளங்குகின்றது.

2006ம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகச் சம்பூர் பிரதேசமக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை உருவாகியது. எனவே அன்றிலிருந்து இன்றுவரை அப்பிரதேச மக்கள்மீள்குடியேற்றம் செய்யப்படாமல் அகதி முகாம்களிலேயே வாழ்ந்துவருகின்றனர்.

நாங்கள் எமது கிராமத்திற்குச் செல்வதற்கு எப்போது விமோசனம் கிடைக்குமென எதிர்பார்த்து வழி மேல் விளிவைத்துக் காத்திருந்து தங்கள் காலத்தை நகர்த்தியபடியேபலர் உறங்கியும் விட்டார்கள். கல்வித்துறையில் பலசாதனைகள் படைத்த இவ்வித்தியாலயம்,2006ம் ஆண்டுமுதல்,கடற்படையினரின் பயிர்ச்சிமுகாமாகவே இயங்கிவருகின்றது.

ஆனால் சம்பூர்மகாவித்தியாலயமோ,தற்பொழுதுசேனையூர் மத்தியகல்லூரியின்,மாணவர் விடுதியில் இயங்கிவருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் அடிப்படைவசதிகளற்றநிலையில், ஐந்நூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்றுவருவதோடு, இச்சூழலிலும் தாங்கள் சளைத்தவர்களல்ல எனத் தமதுதிறமைகளை வெளிக்காட்டியும் வருகின்றனர்.

கற்றவர்கள் செறிந்துவாழும் எமதுநாட்டில் கற்கத்துடிக்கும் மாணவர்களின் .ஆதங்கம் புரியவில்லையா? ஏன் மௌனமாக இருக்கின்றீர்கள்? இந்துசமுத்திரப்பிராந்தியத்தின்,கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த,இயற்கைத்துறைமுகமும்,பாரியகடற்படைத்தளமும் அமைந்துகாணப்படும், உயர் பாதுகாப்புவலயத்திலேயேபாடசாலையொன்று இயங்கமுடியுமாகவிருந்தால்,சம்பூரில் ஏன் பாடசாலை இயங்கமுடியாது? எனவே கல்விமான்களும்,அதிகாரிகளும்,அரசியல்வாதிகளும் தி/ சம்பூர் மகாவித்தியாலயத்தை அதே இடத்தில் இயங்கச்செய்ய முன்வரவேண்டும்.

## திருமலை அபிவிருத்தி....

செலவழித்து தற்போதைய அரசினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அபிவிருத்திச் செற்றிட்டங்களை பொறுப்புள்ள எதிர்கட்சி என்ற வகையில் மதிப்பிட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டிய தேவை தமக்கிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஹம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மதிப்பீடுகளைச் செய்ய அங்கு பயணித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் மீது நடாத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலில், ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்களை ஊடகவியலாளர்களே காப்பாற்றி திருப்பியழைத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அதனையொரு சவாலாகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள் தற்போது அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மதிப்பாய்வு செய்ய முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உண்மையை உலகுக்குச் சொல்லக் கூடிய பத்திரிகையாளர்கள் தேவை - 075 4252042**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்ணினமே!!



எனவே உங்களுடைய திருமணம் விவாகரத்திற்கு இட்டுச் செல்லாமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். அதாவது பெண் 4 விடயங்களுக்காக திருமணம் முடிக்கின்றாள்.

1. மார்க்கம்
2. குலம்
3. செல்வம்
4. அழகு

இவற்றில் மார்க்கமுடைய பெண்ணை உங்களது வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுக்குமாறே இஸ்லாம் உங்களுக்கு கட்டளையிடுகிறது.

கீழே காணப்படும் நற்குணங்கள் உங்களிடம் காணப்பட்டால் நீங்களும் நல்ல கணவனே! அதாவது மற்றைய பெண்களுடன் உங்கள் மனைவியை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். மனைவியிடம் உள்ள குறைகளை மற்றவரிடம் குறையாகக் கூறாதீர்கள். அது உங்கள் உறவினரானாலும் சரி.

உங்கள் மனைவியின் அழகை உங்கள் நண்பர்களிடம் புகழாதீர்கள். அது உங்களுக்கே தீங்கை விளைவிக்கலாம். உங்கள் மனைவியின் ஒரு சில விடயம் வெறுப்பூட்டினாலும் அவளிடம் காணப்படும் நல்ல விடயத்தை ஏற்று மனதை ஆறுதல்படுத்துங்கள்.

மனைவியைப் பற்றி தவறாக வந்த தகவலை வைத்து தீர விசாரிக்காது மனைவியை வீணாக துன்புறுத்தாதீர்கள். அவளுடன் புரிந்துணர்வோடு வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

முற்றும் .. ..

- நஸ்ரியா -

# செஞ்சிலுவை இயக்கத்தின் வரலாறு

பாகம் : 03




அதன் பயனாக டுனான்ட் அவர்கள் ஆஸ்திரியா, ஒல்லாந்து, ஸ்வீடன், பிரஷ்யா மற்றும் ஸ்பானிய நாடுகளின் தேசிய சங்கங்களின் கௌரவ அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

1870ல் பிரான்ஸ் நாடும் பிர'யா நாடும் யுத்தத்தில் மோதிக் கொண்ட வேளையில் அவ் யுத்தத்தினால் காயமுற்ற போர் வீரர்கள் பாரீஸ் நகருக்குக் கொண்டு வரப்பட்டனர். அவ் வீரர்களைச் சந்தித்த ஹென்றி டுனான்ட் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். அதன் பின்னர் போரில் இறந்த வீரர்களை அடையாளம் கண்டு கொள்வதற்காக ஒவ்வொரு வீரரும் தம்மை அடையாளப் படுத்தும் அடையாளப்பட்டி அணிந்து கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்தினார். அதன் பின்புதான் போர் வீரர்கள் பெயர் அல்லது இலக்கம் பொறிக்கப்பட்ட அடையாளப் பட்டிகளை அணியத் தொடங்கினர்.

அதன் பிறகு சமாதானம் ஏற்பட்ட பின்னர் லண்டன் மாநகருக்குச் சென்ற டுனான்ட் அவர்கள் யுத்தக் கைதிகளின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கென அரச பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். பிரான்ஸ் நாடு அதற்கு ஆதரவளித்தாலும் இங்கிலாந்து நாடு அதனை ஆதரிக்கவில்லை.

அதன்பின்னர் 1875 பெப்ரவரி 01ம் திகதி நீக்ரோ இனத்தினரைக் கடத்துதல் மற்றும் அவர்களை வைத்து அடிமை வியாபாரம் செய்தல் தொடர்பாக சர்வதேச மாநாடு ஒன்றை டுனான்ட் அவர்கள் ஒழுங்கு செய்தார்.

அதனைத் தொடர்ந்து வந்த காலங்கள் ஹென்றி டுனான்ட் அவர்களுக்கு அலைச்சல் மற்றும் வறுமை நிறைந்ததாகவும் அமைந்தது. ஆல்சக், இத்தாலி, ஜேர்மனி போன்ற நாடுகளுக்குக் கால் நடையாகவே சென்றார். அங்கெல்லாம் தருமநிறுவனங்களின் தயவிலும், நண்பர்களின் தயவிலும் வாழ்ந்து வந்தார்.



தொடரும் ...

டாக்டர் என்.ரவிச்சந்திரன்
கிளை நிறைவேற்று அதிகாரி
திருகோணமலை கிளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்




# சோயா சப்பாத்தி

**தேவையான பொருட்கள்**

கோதுமை மாவு - 1 கப், சோயாமாவு - 1 மே.கரண்டி, கடுகு - 1-2 தே.கரண்டி, எண்ணெய் - 2 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, உளுந்து - 1-4 கப், காய்ந்த மிளகாய் - 2, சோம்பு - 1-4 தே.கரண்டி

**செய்முறை**



கோதுமை மாவையும், சோயா மாவையும் உப்பு, தேவையான தண்ணீர் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்தில் மிருதுவாக பிசைந்து கொள்ளவும். ஒரு மிளகாயுடன் உளுந்தை சேர்த்து அரை மணி நேரம் ஊற வைக்கவும். நன்றாக ஊறியதும் சோம்பு, உப்பு, ஒரு மிளகாய் சேர்த்து கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும். இந்த விழுதை ஒரு கிண்ணத்தில் வைத்து, ஆவியில் வேக வைத்துக் கொள்ளவும், (ஒரு குச்சியை விட்டுப் பார்க்கும்போது மாவு ஒட்டாமல் வர வேண்டும்).

பிறகு இந்த உளுந்து பூரணத்தை ஆற வைத்து உதிர்த்துக் கொள்ளவும். கடாய் காய்ந்ததும் எண்ணெய் விட்டு, கடுகு தாளித்து, உளுந்து பூரணத்தை சேர்த்துக் கிளறி இறக்கவும். பிசைந்து வைத்திருக்கும் மாவிலிருந்து சிறிது எடுத்து உருண்டையாக்கி கிண்ணம் போல் செய்யவேண்டும்.

உளுந்து பூரணத்தை அதில் நிரப்பி, உருட்டி மெல்லிய சப்பாத்திகளாக தேய்த்துக் கொள்ளவும். தோசைக்கல்லில் சுட்டெடுக்கவும். சப்பாத்திக்குள் வேக வைத்த உருளைக்கிழங்கை வைத்து செய்வதைத்தான் நாம் வழக்கமாக கொண்டுள்ளோம். ஆனால், இந்த சப்பாத்தியில் உளுந்து பூரணத்தை வைத்து செய்வதால், புரதச்சத்து அதிகமாகக் கிடைக்கும்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் சத்தான டிபன் இது.

# அழகுக்கு அழகு சேர்க்கும் குறிப்புக்கள் சில

ஆரோக்கியம்



உடலின் ஆரோக்கியத்தைப் பொறுத்தே அதன் அழகு வெளிப்படுகிறது. ஆகவே வாய்க்குள் போகும் உணவிற்கு ருசியை விட அதன் பயனிற்கு முக்கியத்துவம் தர வேண்டும். அதிக இனிப்பு மசாலா வகைகளையும் ஐஸ்கிரீம் போன்றவைகளையும் எண்ணையில் பொறித்தவைகளையும் நீக்குதல் நல்லது.

இயற்கை அழகுக்கு க்ளென்சர்

- பால் நல்ல க்ளென்சர் (cleanser) என்பதால், குளிர்ந்த பாலில் பஞ்சினைத் தோய்த்து முகம் துடைப்பது சிறந்தது. மேக்கப் போடு முன்பு எப்போதும் முகத்தை க்ளென்சிங் இப்படிச் செய்யவேண்டும்.
- தேங்காயுடைத்ததும் கிடைக்கும் இளநீரும் சிறந்த க்ளென்சிங் மில்க் வீணாக்காமல் முகத்திற்குத்தடவிக் கொள்ளலாம்.
- வறண்ட சருமத்திற்கு இயற்கையான க்ளென்சர் தேனில் பால் சேர்த்து பயன்படுத்துவது என்றால் எண்ணைப் பசை சருமத்தினர் எலுமிச்சை சாற்றினில் சில துளிகள் பால் சேர்த்துக் கலந்து அதைப் பஞ்சினால் தொட்டு சருமத்தை துடைத்து எடுக்கலாம்.

பளிச் முகத்துக்கு

பாதாம்பருப்பு சருமத்திற்கு ஒரு அற்புதப் பொருள் எனலாம். 5 பாதாம்பருப்பினை ஊற வைத்து பால் சேர்த்து விழுதாய் அரைத்து தேன் சில துளி சேர்த்து முகத்தில் பூசுங்கள். 20 நிமிடம் ஊறிய பின் முகத்தைக் கழுவினால் முகம் பளிச்சென்று ஆகிவிடும்.



முகப் பொலிவுக்கு

வெள்ளரிக்காய் (cucumber) சாற்றில் முல்தானிமட்டி மற்றும் பால் சேர்த்துக் கலந்து முகத்தில் பூசி பிறகுக் கழுவினால் வெய்யிலினால் கருத்த முகம் பொலிவு பெற்று விடும்.

கருத் திட்டுக்கள் மறைய

மூக்கு கன்னங்களில் கருப்பு திட்டாய் இருக்கிறதா? சந்தனம், ஜாதிக்காய், வேப்பங்கொழுந்து ஆகியவற்றை நீரினில் அரைத்து பற்று மாதிரி போட்டு வர கருந் திட்டுக்கள் நாளடைவில் நீங்கும்.

கண்ணுக்கு கீழேயும் கருப்பு வளையம் நமக்கு வெறுப்பான வி'யம் தான்... அதற்கு வெள்ளரி விதை பொடியுடன் தயிர் சேர்த்து பேஸ்ட் போலக் குழைத்துத் தடவி வந்தால் ஒரே மாதத்தில் கறுமை காணாமல் போகும்.




# குருப் பெயர்ச்சி (13.06.2014 - 05.07.2015)

***குரு பகவான் வரும் ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2014 மாலை 06.03 மணிக்கு மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்கு மாறுதலாக உள்ளார். 05.07.2015 வரை கடக ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். குரு பகவான் கடக ராசியில் சஞ்சரிக்கவுள்ளதால் 12 ராசிகளுக்கும் உண்டாக்கக் கூடிய பலா பலன்கள். இவை பொதுவான பலன்களே!***



## சிம்மம்

வாழ்வில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற வேட்கை கொண்ட உங்களுக்கு இம்முறை குருப்பெயர்ச்சி அவ்வளவு சாதகமான நிலையை தராது. இருந்த போதிலும் எதிர்பாராத திடீர் பண வரவுகள் கிடைக்கும். குடும்பத்தில் சுப விரயங்கள் ஏற்படும். கணவன் மனைவியிடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகள் உண்டாகி மறையும். கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உத்தியோகத்தில் எதிர்பார்த்த உயர்வுகள் கிட்டும்.

பண வரவுகள் சிறப்பாக இருந்தாலும் வீண் விரயங்கள் அதிகமாக காணப்படும். பன்னிரண்டாம் மாதத்திற்குப் பிறகு சற்று அனுகூலமான காலமாக இருக்கும். தடைப்பட்ட திருமணம் நடைபெறும். குடும்பத்தில் சுபீட்ச நிலை உருவாகும். 21.12.2014 வரைக்கும் சற்று நிதானத்துடன் இருத்தல் அவசியமாகும். லாட்டரி, ஷேர் போன்றவற்றில் பெரிய தொகைகளை இடுதல் அவ்வளவு அனுகூலமாகாது. வீடு, மனை வாங்கும் யோகமும் உள்ளது. வெள்ளை, சிவப்பு என்பன அதிர்ஷ்ட நிறங்களாக உள்ளது.



## கன்னி

அழகிய உடல் வாகும், சிறந்த ஒழுக்கமும் கொண்ட உங்களுக்கு இக் குருப்பெயர்ச்சி அற்புதமான அமைப்பாகும். பண வரவுகளுக்கு பஞ்சம் இருக்காது. பொன், பொருள் சேரும். சொந்தமாக வீடு, வாகனம் வாங்கும் யோக நிலை உங்களுக்கு.

உடல் ஆரோக்கியத்தில் கவனம் இருப்பது நல்லது. எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடையும். தொழில் வியாபாரத்தில் நல்ல இலாபம் கிட்டும் அத்துடன் வியாபாரம் விருத்தியும் அடையும்.

உத்தியோகத்தில் தடைப்பட்டிருந்த பதவி உயர்வுகள் சுமூகமாகக் கிட்டும். வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் வாய்க்கும்.

கணவன், மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். புத்திர வழியில் மகிழ்ச்சி உண்டாகும். கல்வியில் முன்னேற்ற நிலை ஏற்படும். லாட்டரி, ஷேர் போன்றவற்றில் அதிகளவில் முதலிட்டு அதிக லாபத்தைப் பெறலாம்.

அதிர்ஷ்ட நிறங்கள் பச்சை, நீலம் என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






தாய்லாந்தில் நடைபெற்றுவரும் ஆசிய கனிஷ்ட மல்யுத்த போட்டியில் இலங்கை வீரர்களுக்கான பயிற்றுவிப்பாளர்களில் ஒருவராக மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த மல்யுத்த பயிற்றுவிப்பாளரான வேலு திருச்செல்வம் பங்கேற்றுள்ளார். மே மாதம் 8ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெற்று வரும் இவ் மல்யுத்தப் போட்டியில் 10 வீரர்கள் இலங்கையில் இருந்து பங்கு கொண்டுள்ள நிலையில் அவர்களுடன் மூன்று பயிற்றுவிப்பாளர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையில் கல்வி கற்ற பிரதம மல்யுத்த பயிற்றுவிப்பாளர் வேலு திருச்செல்வம் பெரிய கல்லாறு மகாவித்தியாலயத்தில் உடற்கல்வி ஆசிரியராக கடமையாற்றும் நிலையில் கிழக்குப் பல்கலைக் கழக மல்யுத்த அணி பயிற்றுவிப்பாளராகவும் சாண்டோ சங்கர்தாஸ் விளையாட்டுக் கழக செயலாளராகவும் உள்ளார். 2005 ஆம் ஆண்டு முதல் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றும் இவர் தமது மாணவர்கள் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விளையாட்டுத் துறை அமைச்சின் விளையாட்டுப் போட்டியில் 4 பதக்கங்களையும் மல்யுத்த சம்மேளனத்தின் தேசிய போட்டியில் 6 பதக்கங்களையும் தேசிய ரீதியான பாடசாலை மட்டப் போட்டிகளில் 17 பதக்கங்களையும் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான போட்டியில் கிழக்குப் பல்கலைக் கழகம் 28 பதக்கங்களையும் பெறவும் வழிவகை செய்துள்ளார். வேலு திருச்செல்வம் விளையாட்டுத் துறை அமைச்சின் மல்யுத்தப் போட்டியில் 1994 ஆம் ஆண்டு 2ஆம் இடத்தினையும் 1995,1996,1997,1998 ஆம் ஆண்டுகளில் 3 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு நடுவர்களாக முன்னாள் தடகள வீராங்கனை செல்வி. மதுனிகா குமார் அவர்களும் அவருக்கு உதவியாக செல்வி. அஜந்தா அவர்களும் செயற்பட்டனர்.

## சர்வதேசச் செய்திகள்

## துருக்கியப் பிரதமரின் உதை



துருக்கியில் நிகழ்ந்த சுரங்க வெடி விபத்தில் முந்நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதை அடுத்து துருக்கிய அரசிற்கு எதிராக எழுந்துள்ள மக்களின் ஆர்ப்பாட்டம் கடும் நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிலையில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரை பிரதமரின் பாதுகாப்புப்படையினர் அப்புறப்படுத்தும் வேளை அவ் ஆர்ப்பாட்டக்காரரை பிரதமர் காலால் உதைத்தது உலகலாவிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சோபர் அணி வெற்றி

ஆலையடிவேம்பு என.ரி.ரி.ரி விளையாட்டுக் கழகம் தனது முதலாவது வருட முடிவையொட்டி நடாத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியில் அட்டாளைச் சேனை சோபர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது. கடந்த 14ம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் சோபர் அணி அதே பிரதசத்தைச் சேர்ந்த மார்க்ஸ்மன் அணியை எதிர்கொண்டு இவ் வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.



## அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சுற்றுலா

நிலாவெளி ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தமான கோயில்களைப் பார்வையிடுவதற்காக கடந்த வியாழக்கிழமை பயணம் செய்திருந்தனர்.

குச்சவெளிப் பிரதேசத்தின் இந்துக் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிருந்தாபன் அவர்களின் வழிகாட்டலுடன் அறநெறிப் பொறுப்பாசிரியர்களான திருமதி. பிரபாகரன், சிந்துஜா, சாளினி, சாமினி, திவ்யா, சத்தியராணி ஆகியோருடன் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

சித்தாண்டி முருகன் ஆலயம், மயிலம்பாவெளி காமாட்சி அம்மன் ஆலயம், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர், ஈழத்துத் திருச்செந்தூர், சின்னக்கதிர்காமம், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம், களுதாவளை சுயம்புலிங்க ஆலயம், வெருகல் முருகன், மற்றும் காயத்ரிபீடம் உட்பட பல கோவில்களுக்கு இவர்கள் பயணித்துள்ளனர்.

மாலைவேளையில் சிறுவர் பூங்காவிற்கும் வெளிச்ச வீட்டிற்கும் அவர்கள் சென்றதாகவும் தெரிகின்றது.





## பங்களாதேஸில் மூழ்கியது படகு - 12 உடலங்கள் மீட்பு

ஜஹார்த்தாவிற்கு அருகில் படகொன்று மூழ்கி விபத்தடைந்ததில் தற்போது (15) வரை 12 உடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. சனத்தொகை மிக அதிகமாகவும் போக்குவரத்து வசதிகள் குறைவாகவுமுள்ள அந்நாட்டில் அடிக்கடி படகுகள் விபத்தடைவது தவிர்க்க முடியாதுள்ளது. அளவிற்கு அதிகமாக மக்களை ஏற்றுவதாலேயே இவ்வாறு விபத்துகள் நிகழ்கின்றன.

தற்போது மூழ்கிய கப்பலில் சரியாகச் கூறமுடியாது விட்டாலும் சுமார் இருநூறு தொடக்கம் முந்நூறு வரையில் பயணி பயணித்ததாகவும் அவர்களுள் 32 பேர் உடனடியாக மீட்கப்பட்டதாகவும் சுதந்திர ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தில் ஒத்துழைக்க மாட்டோம் - இரஸ்யா

சர்வதேச விண்வெளி ஆய்வுகூட ஒத்துழைப்பிலிருந்து விலகிக்கொள்ள இரஸ்யா தீர்மானித்துள்ளது.

நேட்டோவினால் இரஸ்யாவின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுவருவதையடுத்தே இரஸ்யா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

உக்ரேன் விடயத்தில் கடும் நெருக்கடிகளுக்குள் இரஸ்யாவை வீழ்த்த நேட்டோ நாடுகள் முயன்றுவருகின்ற இவ்வேளையில் இரஸ்யாவின் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

இரஸ்ய இராணுவத் தேவைகளுக்கான அதியுயர் தொழில்நுட்ப உபகரயங்களை வழங்குவதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளதைக் கடுமையாகச் சாடியுள்ள இரஸ்யா இம்முடிவை வெளிப்படுத்தியுள்ளதுடன் தனது சுய விண்வெளித்திட்டங்களில் தான் அதிக கவனம் செலுத்தவிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

## ஆப்கானிய சிறையிலிருந்து பாகிஸ்தான் சிறைக்குக் கைதிகள்

பலவருடங்களாக குற்றச்சாட்டுகள் எதுவுமின்றி ஆப்கானில் அமெரிக்கப்படைகளால் சிறை வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானியக் கைதிகள் பத்துப்பேர் பாகிஸ்தானிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானிய பக்ரான் சிறையில் இருந்து இவர்கள் பரிமாற்றப்பட்டுள்ளனர். எதிர்வரும் டிசெம்பர் மாதம் இச் சிறைச்சாலையை ஆப்கானின் அரசிடம் அமெரிக்கப் படைகள் கையளிக்கவுள்ளன. அதற்கு முன்னர் இச் சிறைச்சாலைகளில் உள்ளவர்களை அவர்களது நாடுகளிடம் கையளிக்க அமெரிக்கத் துருப்புக்கள் முயன்றுவருகின்றன.

கைதிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை பரீட்சித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன உயர் பாதுகாப்புக்குழு சீனன்குடா வான்படைத்தளத்திற்கு வருகை

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனாவின் உயர்பாதுகாப்புக் குழவினர் கடந்த 14ம் திகதி திருகோணமலைக்கு வருகை தந்திருந்தனர்.

இலங்கை வான்படைக்குச் சொந்தமான விமானத்தில் திருகோணமலைக்கு வருகை தந்த சீன இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் ஹுʼ கியூலியாங் தலைமையிலான குழுவினர் திருகோணமலை வான் படைத்தளத்தையும் திருகோணமலை கடற்படை மற்றும் கடலோட்டக் கல்லூரியையும் சுற்றிப்பார்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் வெசாக் போயா தினத்தை முன்னிட்டு அவர்கள் திருமலை நகரப் பிரதேசத்தில் அதிசொகுசு பேருந்தில் பவனி வந்திருந்தனர்.

அதன் போது பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டிருந்ததுடன் போக்குவரத்துக் காவல் துறையினர் கடமையைக் கண்ணியமாகச் செய்தமையையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சீன இராணுவ உயரதிகாரிகளைக் கொண்டு குழவினர் மூன்று......

13


படம்-வான்படைஇணையம்

## தொலைபேசிக் காதலால் பெண் வல்லுறவு

திருகோணமலையைச் சேர்ந்த 35 வயதான பெண்ணொருவரின் தொலைபேசிக் காதலன் அப் பெண்ணை வல்லுறவிற்குள்ளாக்கி விட்டுத் தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் நீண்ட காலமாக தொலைபேசி மூலம் தொடர்பு இருந்து வந்த நிலையில் கடந்த செவ்வாயக் கிழமை இப்பெண் தனது தாயுடன் சந்தேகநபரை சந்திக்க நுவரெலியாவுக்கு வருகை தந்துள்ளார்.

தாம் தாயுடன் நுவரெலியாவுக்கு வந்துள்ளதை சந்தேக நபருக்கு அறிவித்ததையடுத்து குறித்த நபர் இவர்களை அங்கிருந்து முச்சக்கரவண்டியில் அழைத்துச் சென்ற வேளையில் கந்தப்பளை

13

## கல்முனை ஸாஹிரா சாரணரின் துணிகரப்பயணம்



## திருகோணமலையில் களையிழந்த வெசாக்

திருகோணமலையில் இம்முறை வெசாக் விழா களையிழந்துள்ளதாக பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் வெசாக் தின கோபுரங்களும் பந்தல்களும் குறைவாகக் காணப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

வெசாக் விழாவைக் காணும் உள்ளூர் மக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் பரந்த அளவில் நிகழ்ந்த வெசாக் விழாவில் பெரும் எடுப்பில் மக்கள் கலந்து கொண்டதுடன் திருமலை நகரப் பிரதேசத்தின் பெரும்பாலான பிரதேசங்கள் வண்ண விழாக் கோலம் பூண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் ஏன் வெசாக் விழா களையிழந்துள்ளது எனக் கேட்டபோது மக்களின் பொருளாதார நிலையே அதற்குக் காரணம் என ஒருவர் தெரிவித்தார். (விமல்)

## மட்டக்களப்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பொன்றை உருவாக்கும் முன்னேற்பாட்டுக் கூட்டம் கடந்த 14ம் திகதி கயிட் நோசன் கம்பஸ் என்னும் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள்,

13






## தமிழ்-முஸ்லிம் உறவைக் குழப்பும் தமிழ் அதிகாரிகள்

### இம்ரான் மஹ்ரூவ் குற்றச்சாட்டு

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களின் நல்லுறவை சீர் குழைப்பதற்கு சில தமிழ் அதிகாரிகள் முயற்சிப்பது மிகவும் கவலைக்குரியது" என கிழக்கு மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களுடனான சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை கிண்ணியாவில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

திருகோணமலை மாவட்டத்தின் சில பிரதேச செயலகங்களில் உள்ள தமிழ் அதிகாரிகளும், மாவட்ட மட்ட சில தமிழ் அதிகாரிகளும் முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைகளை மறுதலித்து மூடி மறைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக தொடர்ச்சியான

13

விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப் பெருக்குங்கள்
அழைபேசி - 075-2954733

## அரசைக் கண்ணியமாகக் கடிந்தாரா? மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர்



ஒரு யுத்தத்தின் வெற்றியின் பின்பு எவ்வளவு வேதனையான விடயங்கள் இருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வான வேடிக்கைகளை நிகழ்த்தி மகிழ்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அத்தோடு, பல மகிழ்ச்சியான நிகழ்வுகளும் நடைபெறும். ஆனால், அந்த வெற்றியின் பின்னாலுள்ள துன்ப துயரங்களையோ, சோகங்களையோ, இழப்புக்களையோ பற்றிச் சிந்திப்பதில்லை என மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் அண்மையில் விழாவொன்றில் குறிப்பிட்டுள்ளார் .

உதயம் விளையாட்டுக் கழகம் நடத்திய வருடாந்த கலாசார பாரம்பரிய விளையாட்டு விழா தேற்றாத்தீவிலுள்ள மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை.....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org